REGD NO: M 1530.

"BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol. XII OCT. 30. No. 10

JAN 1931

PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

N. B:—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our *Bona fide* receipts.

All Rights Reserved by the Publishers.

பாலவிநோதினி

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
தெய்வ வணக்கம்	433
ஹிதோபதேசம்	434—438
புரட்டும் பொய்யும் பூரியோர்க் கியர்க்கை	439—444
வாய் மதம் பேசிய காக்கை ...	445—447
கபோதி காளியக்கா	448—459
வஞ்சக வியாபாரி	459
அதிக ஆசை அதிக நஷ்டம் ...	460—467
மனத்திற்குறுத்துமதி	467
கர்ணனும்—கண்ணனும்	468—475
ஸுகாதாரம்	476—480
குரங்குகள் வளர்த்த பையன் ...	480

சுபத்தைத் தரும் வெகுமானங்கள்

ஒச்சமில்லாத இரத்தினங்களை அமைத்துச் செதுக்கிய நகைகளைத் தரிப்பவர்களுக்கு அவ்விரத்தினங்கள் வெகு சுப பயன்களைக் கொடுக்கும் என்று பழைய காலத்திலிருந்து நமது பெரியோர் நம்பி வருகிறார்கள். அவ்விதமான ஆபரணங்களையே நமது நாட்டாருக்குக் கொடுக்க வேண்டுமென்னும் விருப்பமொன்றே ஆதிகாலத்திலிருந்து எங்கள் கருத்து. ஆகையால் 36 வருஷத்திற்கு முன் நாங்கள் இந்த வியாபாரம் துடங்கியது முதல் ஒச்சமில்லாதவையும் உயர்ந்த நீரோட்டமுள்ளவையுமான இரத்தினங்களை பதித்த நகைகள் விற்று வருகிறோம். எங்கள் நகைகள் இம்மாதிரியானவை என்று நாங்கள் உத்திரவாதமாயிருப்பதுதான் எங்களிடம் நகை வாங்குபவர்களுக்கு முழு ஜாமீனாகும்.

வைர வியாபாரத்தில் நாங்கள் இவ்வளவு பெருமையடைந்ததற்குக் காரணம் என்னவென்றால், நமது நாட்டாருடன் நம்பிக்கையாயும் குற்றமின்றியும் வியாபாரம் செய்து வருவதேயாம்.

ஆகையால் எங்களிடமிருக்கும் கைதேர்ந்த வேலைக்காரரின் உதவியை நீங்கள் பெற்றுக் கொண்டு, அதனாலுண்டாகும் நற்பயன்களை நீங்கள் அனுபவிப்பதே உங்களுக்கு லாபகரமான வேலை.

சுராஜ்மல் லல்லுபாய் அண்ட் கோ,
நகை வியாபாரிகளும், உயர்ந்த வெள்ளி
சாமான்கள் செய்பவர்களும்,
313, எஸ்பிளநேட், மதருஸ்

மணித் தைலம்

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்யப்பட்ட கூந்தல் தைலம். மண்டையை குளிர்ந்திருக்கச் செய்து, தலைமயிரை உதிராமற் தடுத்து பளபளப்பாயும் நீளமாயும் வளரச் செய்யும்.

5-துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.

இனாம் இனாம்

போஜன விதிகள்.

ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய புஸ்தகம். விலாஸத்தை தெரிவியுங்கள். இனாமாக தபால் செலவின்றி அனுப்புகிறோம்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

வால்மீகி ராமாயண வசனம்.

வால்மீக ராமாயணத்தை ஸம்ஸ்கிருதத்திலிருந்து சரியாகத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருத ஸ்லோகங்கள் சங்க்யையை இன்ன சுலோகங்களின் மொழிபெயர்ப்பென்று அறிய பாராக்கள் இலக்கம் கண்டிருக்கிறது.

பாலகாண்டம்	...	1	0	0
அயோத்தியா காண்டம்	...	2	4	0
யுத்த காண்டம்	...	3	0	0

மற்ற காண்டங்கள் அச்சிலிருக்கிறது. சீக்கிரத்தில் வெளிவரும்.

V. RAMASWAMY SASTRULU & SONS,
292, Esplanade, Madras

FEDERATED INDIA

(An All-India English Weekly)

PUBLISHED EVERY WEDNESDAY

Annual Subscription Rs. 5.

PLEASE APPLY TO:—
THE MANAGER,
'FEDERATED INDIA,'
TONDIARPET, MADRAS.

THE LAW OF ELECTION

BY

K. L. NARASIMHA RAO,

Advocate, High Court, Madras.

Contains all the Acts, Rules, Regulations, and Forms, brought up-to-date regarding Elections to every Statutory Body from the Village Panchayat to the Council of State. Indispensable to every public worker and practitioner.

Price Rs. 3-8-0. *(Postage Extra.)*

"SRI RAMA PRESS" *3, Sivaramulu Chetty St., Tondiarpet, MADRAS.*

ஞானம் வைத்தியவித்தியா

வாசிப்பதற்கு இனிமையானதும் நற்புத்தி புகட்டக் கூடியதுமான இப்புத்தகம், தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய

நாராயணஜீ கேசவஜீ,

நெ. 1/94, சைனா பஜார் ரோட், சௌகார்பேட், மதராஸ்.

Moral class reading books for the young

BY

Varakavi Tiru: A SUBRAMANYA BHARATI

	ரூ.	அ.	ப.
இராமாயண இரகசியம்	0	12	0
ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை	0	2	6
பரதன் — நல்ல தம்பி	0	3	0
ஸீதாதேவி — நல்ல மனைவி	0	4	0
குகன் — சிறந்த நண்பன்	0	2	6
மாருதி — நல்ல அடிமை	0	2	6
விபீஷணன் — சிறந்த பக்தன்	0	1	6

For Copies, please apply to :—

BALAVINODINI OFFICE,

323, Tiruvottiyur High Road, MADRAS.

MADAN MANJARI PILLS

பூலோக அமிர்தமென்று புகழப்படுகின்ற இம்மாத்திரை அஜீரணம், மலச்சிக்கல், ரத்தக் குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளையும், நரம்புத் தளர்ச்சி, நபும்சகத்துவம், இவை போன்ற விசேஷ வியாதிகளையும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் நிகரற்றது.

40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. **1 0 0**

மதன் மஞ்சரி ஆபீஸ், 1/94, சைனா பஜார் ரோட், மதராஸ்.

எங்கும் புகழ்பெற்ற

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது, நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 4. ஷை சாதா ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 3½.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

R. S. சுகந்த மூக்குத்தூள்:

விலை பாடில் 1-க்கு அணா 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 ஷை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா. 1 12 0

விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ் வகைரா பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ. 44, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "**நஸ்யம்**"

மதனகாமேஸ்வர லேகியம்

இது மிக்க பலமும், வீரியவிருத்தியு முண்டாக்குவதில் மிக்க சிரேஷ்டமானது. மேகம், வெட்டை, பலயீனம், சுக்கிலநஷ்டம், நீர் வியாதி முதலான நோய்களை நீக்கி பலமும், காந்தியும், சம்போகசக்தியும், சந்தானபிராப்தியு முண்டாக்குவதில் நிகரற்றது.

இரண்டு டப்பிகள் போதுமானது.

20 தோலா டப்பி 1-க்கு ரூபா 1 4 0

வி.பி. சார்ஜு 0 6 0

பி. சி. ஏ. அண்ட் கம்பெனி,

ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.

ஸ்ரீ மகாபாரத வசனம்.

பாரதப் பிரசங்கி யென்று பெயர் பெற்றவரும் வித்வசிரோமணி யெனச் சிறப்புற்றவருமாகிய ந. சண்முகக் கவிராயரவர்கள் இயற்றியது. பாலவிநோதினிப் பத்திரிகாசிரியர், வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி யவர்களால் பரிசோதிக்கப் பெற்றது. நல்ல உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிடப்பெற்றது. இதுவரையில் இதுபோன்ற பதிப்பு வெளிவந்ததே இடையாது. கலாசாலைக்கும் லைப்ரெரிக்கும் உபயோகப்படக்கூடிய சிறப்புடையதாய்க் கெட்டி கலிகோபயிண்டு செய்தது.

சண்முகக் கவிராயரவர்களுடைய வசனநடை நல்ல பாஷா ஞானத்தையும், சிறந்த வாக்கையும் கொடுக்கக்கூடிய தென்பதும் பாமரருக்கும் எளிதில் விளங்கக்கூடிய தென்பதும் தமிழ் மக்களின் பெரும்பான்மையோர் நன்குணர்வர்.

பாரதம் இதிகாஸ ரத்தினமென்றும் ஐந்தாவது வேதமென்று புகழத்தக்க பெருமை யுடையதென்றும் அதிலில்லாத நீதிகளே இடையா வென்றும் ஆஸ்திக புத்தியைக் கொடுத்து ஒழுக்கத்தில் நிலை நிறுத்தக்கூடிய போதனைகளை அளிக்கக்கூடியதென்றும் பெரியோர்கள் கொண்டாடப்படுவ தாகையினால் தமிழ் நாட்டில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் மக்கள்கையில் பூஷணமாக விளங்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

		ரூ.	அ.	பை.
1.	ஆதிபர்வம்	3	0	0
2.	சபாபர்வம், ஆரண்யபர்வம், விராடபர்வம் இவை மூன்றும் சேர்ந்து ஒரேபயிண்டு விலை ரூபா ...	5	0	0
3.	உத்தியோகபர்வம்			
4.	பீஷ்மபர்வம், துரோணபர்வம், கர்ணபர்வம், சல்லியபர்வம், சவுத்திகபர்வம், ஸ்ரீபர்வம், சாந்திபர்வம், அநுசாசனிபர்வம், அசுவமேதபர்வம் ஆசிரமவாசபர்வம், முசலபர்வம், மகாப்ரஸ்தானிகபர்வம், சொர்க்காரோகணபர்வம் இவை பதின்மூன்றும் ஒன்று சேர்ந்தது. ஒரே பயிண்டு. இது அச்சிலிருக்கிறது. விலை.	5	0	0

இவ் வால்யூம்களை சேர்ந்தாற்போல் ஒரே காலத்தில் வாங்குகிறவர்களுக்கு விலை ரூபா 12-8-0.

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதறாஸ்.

தமிழ் பாலபோத இலக்கணம்.

இந்த இலக்கணம், சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் சிறந்த இலக்கண வித்துவானாக விளங்கிய விசாகப் பெருமாளையரவர்கள் இயற்றியது. சூத்திரங்களெல்லாம் இனிய வசன நடையில் பாலர்கள் எளிதில் தாமே படித்து உணரக்கூடிய முறையில் விரிவாயும் பல உதாரணங்களுடனும் விளக்கப் பட்டிருப்பது இதற்குள்ள சிறப்பாகும். பால விநோதினிப் பத்திரிகாசிரியர். வரகவி - திரு - அ. சுப்ரமண்ய பாரதியவர்களால் பழைய பிரதிக்கிணங்க நன்கு பரிசோதிக்கப் பெற்றது. பள்ளிக்கூட மாணவர்களுக்கும் தனியே தமிழ்ப் பாஷையில் தேர்ச்சிபெற விரும்பிப் படிப்பவர்களுக்கும் இந்த நூல் சாலப் பயன் படக்கூடியதாகையினால் இதனை உயர்ந்த காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிட்டிருக்கிறோம். கலாசாலைத் தலைவர் இதனைத் தங்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகமாகவேனும் பள்ளிக்கூட லைப்ரெரிக்கேனும் உபயோகப் படும்படி சிபார்சு செய்வார்களானால் அது பேருபகாரமாகும்.

விலை ரூ. 1—0—0

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதறாஸ்.

தமிழ் நூல்கள்

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் பிழையில்லாமல் அச்சிடப்பட்டவை.

	ரூ.	அ.	பை.
திருக்குறள் விளக்க நூல்கள் (குறிப்புரையுடன்).			
திருக்குறள் (பரிமேலழகர் உரை பாகெட் சைஸ்)	2	0	0
திருக்குறள் மூலம் (காலிகோ பைண்டு) பாகெட் சைஸ்	0	6	0
வெண்பாக்கள்.			
சிவசிவவெண்பா (குறிப்புரையுடன்) ...	0	2	0
சோமேசர் முதுமொழி வெண்பா ...	0	2	6
இரங்கேச வெண்பா	0	2	0
ஆத்திசூடி வெண்பா	0	1	6
திருத்தொண்டர் வெண்பா	0	1	6
திரட்டு நூல்கள்.			
திருவருட்பா	0	6	0
திருப்புகழ்	0	2	0
பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு ...	0	3	0
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ...	0	4	0
தேவாரத் திருமுறைத் திரட்டு	0	10	0
இலக்கணமும், நிகண்டும்.			
நன்னூல் மூலம்	0	3	0
நேமிநாதம்	0	2	0
புறப்பொருள் வெண்பா மாலை	0	7	0
பதினோராவது நிகண்டு	0	6	0
சேந்தன் திவாகரம்	0	2	0
பாலபோத இலக்கணம் (விசாகப் பெருமாளையர்)	1	0	0
வசன நூல்கள்.			
ஆன்றோர் சரித்திரம் (எம். வி. ஈஸ்வரய்யர்) ...	0	5	0
கதாமஞ்சரி	0	4	0
ஜீவகாருண்ய ஒழுக்கம்	0	4	0
மனுமுறைகண்டவாசகம்	0	5	0

வாவில்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதறாஸ்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 12	1930 ௵ அக்டோபர் மாதம்	பகுதி 10

தெய்வ வணக்கம்

என்னபிழை செய்தாலு மன்னவைக ளுன்மனதில்
  எண்ணா தநாதருய்ய
ஏறுமயின் மீதுகுறை தீரவருமெய்யான
  ஈசனீ யாகுமதனால்
சென்னியுனை யல்லாமல் இன்னமொரு தெய்வத்தின்
  சேவடி வணங்குமோவாய்
தீங்ககல வந்தென்னை யாதரிப்பாயென்று
  செப்புமோ ஒப்பில்வேலா
முன்னைவினையால் வந்த இன்னலறுமாறந்த
  முத்திதரு சத்திபாலா
மூடமதியேன் தமிழ் பாடற் கிரங்கியருள்
  மூவுலக மேத்து முதல்வா
பன்னகப் பாயன்மிசை கண்வளரு மாயன் முதற்
  பண்ணவர்க ளெண்ணி வாழ்த்தும்
பழமறைக டருசீல மழவிடைய ரருள்பால
  பழனிமலை முருகேசனே.

(பாரதி.)

211181.

ஹிதோபதேசம்

(1) ஒருவனுக்கு அவன் செய்த பாபம் உடனே பயன் தருவதில்லை. பாவத்தைத் தொடர்ச்சியாகச் செய்து வருகையில் அது காலக்கிரமத்தில் செய்பவனுடைய வேர்களை அறுக்கும்; அதாவது குடும்பத் தோடழிக்கும். கொடிதெனும் பாபங்களெல்லாவற்றினும் கொடியவை இவையென்று கூறத்தக்கவைகள் பலவுண்டு. அவைகளில், ஏழைகள் மனம் வருந்த அவர்களைக் கெடுக்கும் பாபமும் ஒன்று. இந்தப்பாவம் செய்தவனை எளிதில்விடாது. அந்த ஏழை அழுத கண்ணீரே அவனுக்கு வாளாகும். அதிகார தோரணையில் வந்தவர்களில, பரிபக்குவ மில்லாதவர்கள் இந்தப் பாபத்துக்கு ஆளாவது உலகத்தில் இயல்பாக இருக்கிறது. இதற்குப் பயந்தே அநேகர், பலவேலைக்காரரைக் கட்டியாளத்தக்க பதவியை விரும்புவதில்லை.

(2) ஏழைகள் பங்கில் ஈசனிருப்பான். ஏனெனில் அவர்கள்தான் ஈசனை நினைப்பவர்கள். ஆகையினால் ஏழைகளின் வயிறெரியப் பண்ணுகிறவன் ஈசனுக்குக் குற்றஞ் செய்தவனாவன். பரம ஏழைகளாய்ப்போன பாண்டவர் பக்கம் பரந்தாமனிருந்து துணைபுரிந்து அவர்களுக்குத் துரோகம் புரிந்த கௌரவர்களை நாசஞ் செய்ததை யறிந்த விவேகியானவன் ஏழைகளுக்குத் தீங்குசெய்வானா?

ஏழைபடிமையைக்காக்க ஈசன் எதையும் செய்வான். அர்ச்சுனனுக்குக் கண்ணன் சாரதியாயிருந்தபோது பதின்மூன்றாவது நாள் போரில் தேர்க் குதிரைகள் களைத்துப்போக அவைகளைக்கண்ணன் குளிப்பாட்டித் தண்ணீர் காட்டிக் களைதெளிவித்தார். இதனை அறிந்த விவேகி ஏழைகளை அலட்சியம் பண்ணுவானா?

(3) தாசரதியாகிய ஸ்ரீ ராமன் ஏழை வேடனாகிய குகனிடம் நடந்து கொண்ட நேர்மையை எண்ணினால், அன்பு, கருணை, உதாரத்வம் யாவும் எவனிடம் விளங்குகின்றனவோ அவனே புருஷோத்தமனாவனென்பது நன்கு விளங்குகின்றபடியால், என்றும் எந்த வேளையிலும் எந்த நிலையிலும் நாம் ஏழைகளையாதரிப்பதிலும் அவர்களிடம் அன்பு பாராட்டி அவர்கள் வாழ்த்தும்படியாய் நடந்து கொள்வதிலும் கவனமுடையவராயிருக்கவேண்டுவது நமது கடமையாகும். "பெருமையும் சிறுமையும் தான் தர வரும்" என்று பெரியார் கூறியதை மறக்கலாமா?.

(4) மனிதர்கள் பொருளில்லாதவராயிருந்தபோதிலும் தங்களை அடக்கிக் கொள்வதில் எப்போதும் ஊக்கமுடையவராயிருந்தால் சிறப்படைவார்கள். ஒழுக்கங் கெட்டும் பாப வழியிலே நடப்பவர்கள் பொருள் படைத்தவராயினும் அல்லது அதிகாரம் வகித்தவராயினும் அவர்கள், மேன்மையடைவது காலத்திரயத்துமில்லை; பலபேருடைய சாபத்திற்காளாய் முடிவில் கொடிய வேதனையை அடைவார்கள்.

(5) பிறர் குற்றங் கூறிப் பெருமையடையப் பார்ப்பது துரியோதனன் பாண்டவர்க்காகத் தூது வந்த கிருஷ்ண பகவானைப் படுகுழியிலிறக்கிக் கொல்லப் பார்த்ததற்கே ஒப்பாகு மென்பது திண்ணம். பெருமை கூறிப் பெருமையடையப் பார்ப்பது பெரியார் செய்கையாகும். பெரியாராவது, வயதிற் பெரியார் பெரியராகார். அறிவிற் பெரியாரே பெரியாராவர். அறிவிற் பெரியார் எப்பொழுதும் பிறர் வருந்த நடக்கமாட்டார்கள்; தம்மால் பிறர் பெருமை பெறவே கருதி நடப்பார்கள். வயதிற் பெரியவனொருவன் தன்னைப் பெரியானென மதித்துச் செருக்கடைவானானால் முடிவில் அவனுக்கு அவமானமும் இழிவும் வந்து சேரும்.

(6) ஒருவன் பேசும் வரம்புகடந்த சொற்களினால் அடிபட்டவன் இரவும் பகலும் துக்கப்படுவான். இதனைச் சிறிதூகிப்பவன், ஒருபோதும் வரம்பு கடந்து பேசவே மாட்டான். ஆயுதங்களினால் வெட்டுப்பட்டது ஆறும். தீயினாற் சுடப்பட்டதும் ஆறும். ஆனால்சொல்லினால் உண்டான புண் தேகமுள்ளவரையிலும் ஆறுவதில்லை.

(7) கோபிக்கிற சுபாவமுடைய ஒருவனுக்குப் புத்திரன், வேலைக்காரன், ஸ்நேகிதன், சகோதரன், மனைவி, இவர்களும் சத்தியம், தர்மம் முதலியவைகளும்நிச்சயமாய் இல்லாமற்போம். கோபம் பொறுமை இவற்றின் லாபங்களை உணரத்தரமில்லாத ஞானசூனியரே கோபத்திற்கிடங் கொடுப்பர்.

(8) நல்ல குணங்களுக் கிருப்பிடமாய்த் தாய் தந்தையர்க்கு வேண்டியவனா யிருக்கும் புதல்வனே சகல நன்மைகளும் பெறத்தக்கவனாக விளங்குவான். அவன் சிறியவனானாலும் பெரியவனே யாவான். மாதாவையும் பிதாவையும் ஜ்யேஷ்டனையும் வித்துவான்களையும் மகரிஷியையும், பொறுத்தவனையும, அவமதித்தலாகாது. சக்தியுடையவன் எப்பொழுதும் பொறுமையை வகித்திருப்பான். சக்தியற்றவனே கோபிப்பன். கோபம் விவேக சூனியனுடைய மூளையையே தனக்கிருப்பிடமாகக் கொள்கிறது. பாபம் கோபத்தையே தனக்கு விளைநிலமாகக் கொள்கிறது. கோபிக்கிறவனிலும் கோபியாதவன் சிறந்தவன். பொறுமையில்லாதவனினும் பொறுமையை யுடையவன் சிறந்தவன். மனிதரல்லாத ஏனைய பிராணிகளைப் பார்க்கிலும் மனிதர் சிறந்தவர். பொறுப்பவனுடைய வருத்தமே திட்டுகிறவனை எரிக்கும். திட்டுகிறவனுடைய புண்ணியத்தைத் திட்டப்படுகிறவனடைவான். முள்ளைப்போன்ற சொற்களினால் காரியசாதகம் செய்து கொள்ளப் பார்ப்பவன் மனிதரிற் கடைப்பட்டவனாவான்.

(9) வயதாக வயதாக உலகத்திற்குப் பயப்பட வேண்டும். அபவாதத்துக்கும் பயப்பட வேண்டும் பகையே யேற்படாதிருக்கும் மார்க்கத்தையே தேடிக் கொள்ளவேண்டும். வயதானவன் எவ்வளவு பெரிய அறிவாளியா யிருந்தாலும் சிறுவர்கள் தன்னை அவ்வறிவு கருதி மதிப்பார்களென்கிற எண்ணத்தை மறந்து சர்வ ஜாக்ரதையாயிருக்க வேண்டும். வயதான

வன் சிறுவர்களை மகிழ்விப்பது நயத்தினாலல்லது பயத்தினால் ஒருகாலத்துமில்லை. வயதேற ஏற மனிதன் விகாரரூப மடைகிறான்; பிறருக்கு அருவருப்பு உண்டாகும்படியான நிலையை அடைகிறான்; இருமுகிறான்; தும்முகிறான், கோழை உமிழ்கிறான். இன்னும் இவைபோல்வன பல வுண்டு. ஆகையினால் சிறுவர்கள் வயதானவரிடம் மதிப்புவைப்பதரிது. மதிப்பு வைக்கும்படி நடக்கவேண்டுமானால், ஹிதோபதேசத்தை மேற்கொள்ள வேண்டும். இதமுடையவரே பதம் பெறுவர்.

(10) கடவுள் தன்னிடம் அன்பும் பயமும் உடைய அடியாரிடமே இரக்கங் காட்டுவர். தன்னைப் போன்றவர்களிடம் அன்பும் அவர்களுக்குத் தீங்கு செய்வதில் அச்சமும் உடையவனுக்கே கடவுளிடத்தில் அன்பும் பயமுமுண்டாகும். தன்னைப் போற் பிறரையும் எண்ணி நல்ல வழியிலே நடவாதவனைக் கடவுள் வெறுப்பார். உலகத்தில் எவன் தன்னுடைய இனிய குணங்களினால் எல்லோருக்கும் நல்லவனாகிறானோ அவனுக்குக் கடவுள் சந்நிதானத்திற் பிரவேசிக்க யாதொரு தடையுமிராது. கடவுளின் கிருபையை அடைய முயல்வதே மக்கள்களுடைய கடமையில் முதற் கடமையாகுமாதலால், அது சித்தியாகும் வழியிலே நமது செய்கைகளைக் கவனித்துச் செய்தல் வேண்டும்.

Always be in time both at school
and at work.
"Punctuality is the soul of business."

புரட்டும் பொய்யும் பூரியோர்க்கியற்கை

ஒரு நகரில் தனபாலன் தந்திரபாலன் என்று இரண்டு வியாபாரிகளிருந்தார்கள். இவர்களில் தனபாலன் என்பவன் தந்திரபாலன் என்பவனுக்கு இருபது பவுன் கடன் கொடுத்திருந்தான். தந்திரபாலன் பணக் கஷ்ட மேற்பட்டு வெகு சிரமப்பட்டான். அதை யுத்தேசித்துத் தனபாலன் அவனை வெகு நாள் வரையில் பணம் கேட்காமலே சும்மாவிருந்தான். அவன் சும்மாவிருக்க இருக்க இவனும் அதைப்பற்றி யொன்றும் பேசாமலே யிருந்தான்.

தந்திரபாலன் கவலையின்றி யிருப்பதைக் கவனித்த தனபாலன் "இப்படிக் கேட் காமலிருந்தால் பணம் போய் விடும்—'தாக்ஷண்யம் தனநாசம்'—கடன் கேளாமல் கெட்டது—பண்டம் பாராமல் கெட்டது—என்பார்கள். இனிச் சும்மா விருப்பதாகாது" என்று கருதி ஒரு நாள் தந்திரபாலன் வீட்டுக்குப் போய் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து மெதுவாய், "நண்ப, அந்த இருபது பவுன் கொடுபடாமலே யிருக்கிறதே" என்று கேட்டான்.

தந்திரபாலன் நகைத்து, "இருபது பவுனா? அதனை முன்பே திருப்பிக் கொடுத்தாய் விட்டதே. கொடுக்காதிருந்தால் இத்தனை நாள் நீ சும்மா விட்டிருப்பாயா? இப்பொழுது தந்திரமாய் வந்ததுபோல்

வீட்டுக்குப் பல தடவை வந்திருக்கமாட்டாயா? அட பைத்தியமே, மறந்து போயிருப்பாய் கணக்கில் வரவு வைக்க! நினைத்துப் பார்", என்று கூறினான்.

இதைக் கேட்டதும் தனபாலன் "ஓகோ பண விஷயத்திலே தாக்ஷண்யம் பார்ப்பது தவறு. ஸ்நேகம் கெடுவதும் நேசமுண்டாவதும் பணத்தாலேதான். இவன் நல்ல நேசன் தான். இருந்தாலும் இல்லாமையினால் தந்திரத்தில் தப்பப் பார்க்கிறான். சாதாரணமாய் இவன் பணம் வரவில்லை. கஷ்டப்படுகிறேன் என்று சொல்லியிருந்தால் நான் இவனை என்ன செய்துவிடப்போகிறேன். உன் சௌகரியம் போல் சீக்கிரம் கொடுத்து விடு. நாளாய் விட்டது.-என்று கூறிவிட்டுத் திரும்பி யிருப்பேன். இவன் நம்மை வாய்மதம் பேசி ஏமாற்ற வல்லவா பார்க்கிறான்? பார்ப்பது மல்லாமல், 'பைத்தியமே' என்று பைத்தியக்காரப் பட்டங் கட்டவும் பார்க்கிறானே—இனிச் சும்மா விடுவது கூடாது" என்று கருதி, அவனைப் பார்த்து, "கவனி, நீ தான் ஞாபகமறதியாய்ப் பேசுகிறாய்? தனபாலனுக்கு பவுனைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணியிருப்பாய் எப்போதாவது. அதைக் கொடுத்து விட்டதாக எண்ணிப் பேசுகிறாய் என்று கருதுகிறேன். நீ கொடுக்கவில்லை. இந்த அற்பக் காசுக்கு நான் பொய் சொல்வேனா?—" என்றான்.

தனபாலன் இவ்வாறு சொல்லி வாயை மூடுமுன் தந்திரபாலன் வெகுண்டு "நான்மாத்திரம் இந்த அற்பக் காசுக்குப் பொய் சொல்லுகிறேனாக்கும். நன்றா

யிருக்கிறது நீ பேசும் பேச்சு!" என்று கடுகடுப்பாய்க் கூறினான்.

தனபாலன்—சரி!-என்று மறுமொழிகூறி, உடனே அவ்விடம் விட்டெழுந்து, தன் வீடுவந்து நெடுநேரம் ஆலோசனையிலிருந்து, அப்பால் மறுநாள் நியாயாதிபதியினிடம் பிராதுகொடுத்து விட்டான்.

விசாரணைத் தேதியன்று இருவரும் நியாயாதிபதியின் முன் ஆஜரானார்கள். நியாயாதிபதி இருவரையும் கேட்கவேண்டியவைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டு தனபாலனைப் பார்த்து, "நீ தந்திரபாலனுக்குப் பவுன் கொடுத்ததாகச் சொல்லுகிறாய். தந்திரபாலன் அதைத் திருப்பிக் கொடுத்ததாகச் சொல்லுகிறான். நீ பவுன் கொடுத்ததற்குச் சாக்ஷியுமில்லை, அது விஷயமாய் ஏதேனும் கைச்சாத்தும் பெறவில்லை, தந்திரபாலன் திருப்பிக்கொடுத்ததற்கும் சாக்ஷியில்லை. இந்தவழக்கை நானெப்படித் தீர்ப்பது?" என்று விளையாட்டாக ஒரு வினா எழுப்பினார்.

தனபாலன், "பிரபுவே, தந்திரபாலன் நான் அவனுக்குக் கொடுத்த பவுனைத் திருப்பிக்கொடுத்துவிட்டதாகத் தங்கள் ஸந்நிதியில் சத்தியம் செய்து விட்டாற் போதும். எனக்கு அந்தப்பவுன் வேண்டாம். உத்தரவாகட்டும்" என்றான்.

நீதிபதி—தந்திரபாலா, என்ன சொல்லுகிறாய்?—

தந்திரபாலன்—ஆகா—

நீதிபதி உடனே கற்பூரம் ஏத்தும்படி ஏவலாளருக்கு உத்தரவிட்டார். கற்பூரம் பொருத்தி நியாயாதிபதியின் முன் வைக்கப்பட்டது.

தந்திரபாலன் உடனே தனபாலனை அழைத்து, "இந்த என்கைப்பிரம்பைச் சற்று வைத்திரு. நான் கற்பூரத்தை அணைத்துவிட்டுப் பெற்றுக்கொள்கிறேன்." என்று கூறித் தன் கைப்பிரம்பைத் தனபாலனிடம் கொடுத்து விட்டு, "நான் வாதியிடமிருந்து வாங்கிய இருபது பவுனையும் இதோ என்முன் இருக்கிற வாதியின் கையிலேயே கொடுத்து விட்டேன். கடவுளின் பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்" என்று கூறிக் கற்பூரத்தை அணைத்தான்.

நீதிபதி தனபாலனைப்பார்த்து, "இப்போதென்ன சொல்லுகிறாய்?" என, தனபாலன், "இனி நான் என்ன சொல்லுவதற்கிருக்கிறது. நான்போக வேண்டியதுதான் வாயை மூடிக்கொண்டு" என்று விசனத்துடன் விடைகூறினன்.

இச்சமயம் தந்திரபாலன் தனபாலனிடமிருந்து தன்பிரம்பைத் திரும்பக்கேட்டு வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட முகமலர்ச்சியுடனிருந்தான்.

நீதிபதி தந்திரபாலன் தன் பிரம்பைத் தனபாலனிடம் கொடுத்து அப்பால் சத்தியஞ் செய்ததையும் பின்பு அவனதைப் பெற்றுக்கொண்டதையும் கவனித்துக்கொண்டிருந்தாராதலால், அப்பிரம்பில் ஏதோ சூதிருக்கிறதென்று கருதி, "தந்திரபால, அப்பிரம்பை இங்கேகொடு" என்று கேட்டுவாங்கித் தனபாலனிடம்

கொடுத்து, "இதை நீர் எடுத்துக்கொண்டுபோம். இப்போதுதான் உமது கடன் கொடுக்கப்பட்டது" என்றார்.

தந்திரபாலன்—நீதிபதியைப் பார்த்து, "நான் வாதி சத்தியம் செய்யச் சொன்னபடி சத்தியம் செய்தேன். இனி அதுபற்றிப் பேச்சேது? இருப்பினும் இருபது பவுன்பெறுமா இந்தப்பிரம்பு?—இது என்ன நியாயம்?" என்று கேட்டான்.

நீதிபதி—இது ஒரு நியாயம். நீ உன் வீடு திரும்பு பேசாமல்—பேசுவாயானால் சிறைவாசம் ஏற்பட்டுவிடும். நீயெப்போது உன்கைப்பிரம்பை உன்எதிராளியிடங்கொடுத்து விட்டுச் சத்தியம் செய்தாயோ அப்போதே நான் தெரிந்து கொண்டேன் உன் தந்திரத்தை, அவ்வளவு தூரம் தெரிந்து கொள்ளச் சக்தியில்லாவிட்டால் இந்த ஸ்தானத்துக்கு மகிமை யேது? என்று கூறி அப்பிரம்பை வாங்கி அது இரண்டு துண்டாகும்படி அதைக் கீழே விட்டெறிந்து "இதோ பார் உன்னுடைய மோசம் வெளியாவதை!" என்றார்.

பிரம்பு கீழே விழுந்து முறிந்ததும் அதிலிருந்து இருபது பவுன் கலகலவென்று கீழே உதிர்ந்தது. எல்லோரும் கண்டு வியப்பெய்தினர். தந்திரபாலன் தலையில் வெட்கமென்னும் பாரம் சுமந்தபடியால் அவன் தலை நிமிராமல் புருஷனைப் பறிகொடுத்த விதவையைப்போல் நின்றான்.

நீதிபதி அவனை, அவன் தன் நண்பனை மோசஞ் செய்யப் பார்த்ததுமல்லாமற் பொய்ச் சத்தியம் செய்து தப்பிக் கொள்ளப் பார்த்ததற்காக இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்துச் சிறைசாலைக்

கனுப்பித் தனபாலனிடம் அவனுக்குச்சேர வேண்டிய இருபது பவுன்களையும் கொடுத்து விட்டுக் கனுப்பினார்.

எப்போதும் பொய்யும் புரட்டும் நீதிபதியின் ஸந்நிதியில் நிலைக்கு நிற்கமாட்டா. நீதிபதியின் ஸந்நிதியைத் தெய்வ ஸந்நிதானத்துக்குச் சமானமாகக் கொள்ள வேண்டும். அந்த இடத்தில் பொய் கூறுவது தெய்வ ஸந்நிதானத்திற் பொய் கூறுவதற்கு நிகராகும். இந்தப் பொய்க்கு இங்கே தண்டனை கிடைப்பதுமல்லாமல் மறுமையிலும் கொடிய நரக தண்டனை கிடைக்கும்.

அநேகர் வாங்கிய கடனைக் கொடுக்க வழியில்லாமற் போனால் இப்படிப்பட்ட கோணலான வழியில் தப்பிக் கொள்ள எத்தனிக்கிறார்கள். நேர் வழியில் நின்று தண்டனை யடைந்தோமாயினும் பெருமையுண்டாகுமே தவிர இழிவுண்டாகாது. ஸ்ரீ ராமதாஸ், மாணிக்கவாசகர் இவர்களைப் போன்ற பக்திமான்கள் அரசனுடைய பொருளை யெடுத்துக் கோயில் கட்டி அகப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் தாங்கள் செய்ததைப் பொய்யினாலாவது வஞ்சகத்தினாலாவது மறுக்க வில்லை. அவர்களை அரசன் தண்டித்தான். ஆயினும் அவர்கள் செய்த செய்கைகள் உலக உபகாரமான செய்கைகள். தவிர அவர்கள் ஸத்தியந் தவறாத பக்தர்கள். ஆகையினால் முடிவில் அவர்களுக்குக் கடவுளுடைய பரிபூரணமான கிருபை ஏற்பட்டது. அதனால் அவர்கள் அரசரும் பூஜிக்கும்படி ஏற்ற பதவி யடைந்தார்கள்.

ஆகையினால் எப்போதும் ஸத்தியமும் நேர்வழியும் கடைப்பிடிப்பதே மாந்தரென உதித்தார்க்கேற்ற நெறியா மென்றுணர்க! (உண்மை கடைப்பிடி.)

வாய்மதம்பேசிய காக்கை

உத்தரதேசத்தில் சந்த்ராசலத்திற்கருகே ஒரு சிற்றூரில் பணக்கார வாணியர் பலர் வாழ்ந்து வந்தனர். அந்த நாட்டில் கருங்காக்கை யொன்று தவிர பசு பட்சி முதலிய ஈசுவரசிருஷ்டியி லடங்கிய சகல ஜந்துக்களுமிருந்தன. இங்கே நமக்கு அன்னப் பறவை அபூர்வமா யிருப்பதுபோல் அங்கே அவர்களுக்குக் கருங்காக்கையைக் காண்பது அபூர்வமாயிருந்தது. அவர்கள், "காக்கை யென்கிற பறவையொன்று எங்கேயோ தூரதேசத்தி லிருக்கிறதாமே, அது நல்ல அழகிய வடிவினை யுடையதாமே; அது நாம் பார்க்கக் கிடைக்குமா?" என்று பேசிக்கொள்வது வழக்கம்.

இப்படி யிருக்கையில் ஒருநாள் வாடைக்காற்று பலமாய் வீசியது. அக்காற்றின் வேகத்தி லகப்பட்ட ஒரு காக்கையானது மேலே கூறிய சிற்றூரிலேபோய் விழுந்தது. அதைக்கண்ட அவ்வூரார் யாவரும் வந்து பார்த்துக் களித்து வியப்புடனெடுத்து ஒரு பல்லக்கிலே வைத்துக்கொண்டுபோய் இரக்கையை உருவி உலர்த்திப்பால் புகட்டி நெய்யருந்திக் குங்குமச் சம்பாவரிசி குத்திக் குழையப்பொங்கி கற்கண்டு கூட்டிக் கவளமூட்டிக் காலுக்கு நவரத்தினத் தண்டைகொலுசு கிண்கிணி ஆரமுதலிய ஆபரணங்கள் பூட்டி அலங்கரித்து வெகு அருமையாய் வளர்த்து வந்தனர்; விடியற் காலையிலெழுந்ததும் அதன் காலில்விழுந்து பணிந்து பின் முத்தமிட்டு முகத்துடன் முகம்வைத்து முதுகுதடவிக்கொடுத்து உபசாரணை செய்து வரலாயினர்.

எச்சிற் சோற்றுக்குப்பறந்து கொண்டிருந்த காக்கைக்கு இவ்வாறு வாழ்வுவரவே அது மாம்சபர்வத மனிதரைப்போல் ஊதிப்போயது. அவ்வூரிலிருந்த அன்னப் பறவைகளெல்லாம் வறுமையுற்று, நம்முடைய ஊரில் காக்கைகளடையும் கதியடைந்து வருந்தின; இதுவும் வினை வசந்தானென்று பிரம்மதேவரை நினைத்துக் கொண்டிருந்தன.

தின்றுமதத்த அக்காகமானது தெருவெல்லாந் தாவி அன்னம்போ லுலாவி இறுமாந்து புதுவாழ்வைப் பெற்றவரைப்போற் கண் தலை தெரியாமல் அலைந்தது. தானிருந்த பழையநிலையையும் தன்சாதியையும, தன்குலத்தையும், தன்கோத்திரத்தையும், தான்வந்த வழியையும், முன்விதியையும் பின்மதியையும் எண்ணிப் பாராமல், ஆகாயத்திலிருந்து இறங்கிய யோக தேவேந்திர சமபத்தை அநுபவிப்பதுபோல் கவலையற்றுத் திரிந்தது.

இப்படியிருந்த காக்கையானது ஒருநாள் சில அன்னப்பறவைகளை நோக்கி, “ஓவெண் குஷ்டம் பிடித்த சாதியே, உங்களுக்கு ஜீவனமெப்படி? நீங்கள் நெடுந்தூரம், பறக்கமாட்டுவீர்களா?” என்று வினவியது.

இதைக்கேட்ட அன்னங்கள், நொந்து வருத்தப்பட்டுப் “புல்லோருக்கு நல்லகாலமும் நல்லோருக்குத் தீயகாலமுமா யிருக்கிறதே” என்றுகருதி, “ஐயா, காக்கையாரே, நாங்கள் பஞ்சைகள். உங்களுக்குச் சரியாய்ப் பறக்க எங்களாலாகுமா?” என்று கூறின.

காக்கை.—அப்படியல்ல; நீங்களும் நானும் பறந்து பார்ப்போம்.

அன்னங்கள்.—எங்களுக்குச் சோறேது தண்ணீரேது?

காக்கை—சை—இவ்வளவுதானா உங்கள்பவுஷு!

இப்படிச் சொல்லவே அன்னங்கள், “சரி! அப்படியே பறப்போம்” என்று கூறி உயரவெழும்பிப் பறக்கத் தொடங்கிக் காடு, கரை, நாடு, மேடு என்பது நோக்காமற் கடலின் நடுமத்திக்குப் போயின. காக்கையும் பறந்து அவைகளுடன் சென்று நடுக்கடலையடைந்தது. அப்பொழுது அதற்கு உட்கார ஓர் ஆதரவில்லாமற் போனபடியால் இளைத்துக் களைத்துப்போய்த் தன்னாலானமட்டும் இங்குமங்கும் பறந்து பார்த்துக் கடைசியில் விசையொடுங்கி அசைவற்றுச் சிறகைச் சுருக்கிக்கொண்டு தலைகீழாய்க் கடலில் விழுந்திறக்கும்படியான கதியை யடைந்துவிட்டது!

அன்னங்கள் ஆனந்தமாகப் பறந்தன. காகம் என்ன செய்யும்! அதன் இறுமாப்படங்கியபடியால் அதற்குப் புத்தி வந்தது. உடனே அது அன்னங்களை அழைத்து, “நல்லோர் பெரியோருடைய நலந்தெரியாமல் நயமுணராமல் வாய்மதம்பேசி வழிகெட்டழிந்தவன் நான். நல்லகுணவான்களே, வீதிதோறும் மலந்தின்னும் சாதியாகிய எனக்குப் பலமாகிய அமுதங்கிடைத்தும் அதைப்போற்றிக் காத்துக்கொள்ளாமல் பெரியோராகிய உங்களுடன் வம்புபேசியதனால் இதோ உயிரை இழக்கின்றேன்” என்று கூறிக் கடலில் வீழ்ந்திறந்தது.

இதனால் நாம் உணர்வதென்ன? பதவியினாலாவது செல்வத்தினாலாவது தேகக் கொழுப்பினாலாவது இறுமாப்படைந்து வாய் மதம்பேசினால் வாழ்வுகெட்டழிய நேரிடுமென்பதேயாம்.

இந்தக்கதை, தன்னைமறந்து இறுமாப்படைந்து வாய்மதம்பேசிய கர்ணனைநோக்கிச் சல்லியனென்பவன் கூறியது. (வாய் மதம் பேசேல்.) (பாரதம்)

கபோதி காளியக்கா

ஓர் உண்மைக் கதை

[சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் 'பால இந்தியா' வில் எழுதியதன் மொழி பெயர்ப்பு.]

(லோகோபகாரி)

செங்கோடன் ஓர் ஏழைக் குடியானவன். அவனுடைய ஊர் வேளாளப் பட்டி. அவ்வூரில் அவனுக்குக் கொஞ்சம் பூமி யுண்டு. நல்ல புத்திசாலி. வேலையில் சூரன். அவனுடைய இருபதாம் வயதில் அவன் தந்தை காலமானார். கொஞ்சம் நோயாளியான தாயாரும், பதினான்கு வயதுள்ள ஓர் தம்பியும் அவனுக்கு இருந்தார்கள். தம்பி வயல் வேலையில் அவனுக்கு உதவி செய்து வந்தான்.

ஒரு நாள் செங்கோடன் தாயார் கூறினாள்:— "நீ இந்த வருஷம் கட்டாயம் கலியாணம் செய்து கொள்ள வேண்டும். எத்தனை நாள் இப்படியே காலம் கழிப்பது? எனக்கோ வயதாய் விட்டது. உன் தகப்பனார் பெரிய கடன் சுமையை வைத்துச் சென்றார். கடவுளருளால் உழைத்துக் கடனை அடைத்து விட்டோம். இப்போதைக்கு இல்லை. காளியக்கா உனக்குத் தகுந்த பெண். திடதேக முள்ளவள். நீ மட்டும் ஏன் தனியாக உழைத்துச் சாகவேண்டும்? உனக்குக் கலியாணம் பண்ணிவைத்து விட்டேனானால் எனக்குக் கவலை விட்டது. வயலுக்கு உனக்குச் சோறு கொண்டு வரவும், மாடு கன்றையும் வீடு வாசலையும் பார்க்கவும் ஒருத்தி ஏற்பட்டு விடுவாள்" என்றாள்.

செங்கோடன் மௌனமா யிருந்தான். அவன் தாயார் சென்ற இரண்டு வருஷமாக இப்படித்தான் மன்றாடிக் கொண்டிருந்தாள். காளியக்கா அவள் அண்ணன் மகள். அதிலும் இப்போது அவளுக்கு, வாயுப்பிடிப்பு வந்து படுத்த படுக்கையாய்க் கிடந்ததால் வேலைக்கு இன்னும் ஓர் ஆள் இருந்தால் நல்லதாயிற்றே என்று தோன்றிற்று.

கிழவி மேலும் கூறியதாவது:— "அவள் தகப்பன் உன் அப்பனோடு சண்டை யிட்டதால் என்ன? அதற்காக உறவு முறை போய்விடுமோ? பெண் நல்லவள். பழைய சண்டைகளை மறந்து விட வேண்டும். அவள் தகப்பன் மூடன் என்பதற்காக முறைப் பெண்ணை விட்டு விடலாமா?"

செங்கோடன் சட்டென்று நிச்சயம் செய்து கொண்டு கூறினான்:— "சரிதான், அம்மா, யாராவது ஒருத்தியைக் கட்டிக்கொண்டால் போகிறது. இனி மேல் எங்கே போய்ப் பெண் தேடப் போகிறோம்? முன் பின் தெரியாத இடத்தில் கலியாணம் பண்ணினால் வருகிற பெண் எப்படி யிருக்குமோ யார் கண்டது?"

கிழவியின் ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. அந்த மகிழ்ச்சியில் வாயு உபத்திரவத்தைக் கூட மறந்து விட்டாள். சந்தோஷ சமாசாரம் தெரிவிக்க உடனே தன் அண்ணன் வீட்டுக்குச் சென்றாள்.

மணம் முடிந்தது. அந்த வருஷம் செங்கோடனுக்கு நல்ல விளைச்சல். அவன் வீட்டிலேயே பிறந்து

வளர்ந்த காளைக்கன்று சனிக்கிழமைச் சந்தையில் நாற்பது ரூபாய்க்கு விலை போயிற்று. எனவே கலியாணச் செலவுக்குக் கஷ்டப் படவில்லை. கடனும் ஏற்பட வில்லை. பந்துக்கள் வைத்த மொய்ப் பணம் ஏறக்குறைய 100-ரூபாய்க்கு வந்தது. அது முழுவதும் செலவழிய வில்லை. "சோற்றிலும் கூத்திலும் எதற்காகப் பணத்தைத் தொலைக்க வேண்டும்? இன்று பணம் வந்தாலும் பதிலுக்குப் பதில் நாமும் மொய் வைத்துத் தானே ஆக வேண்டும்?" என்றான் செங்கோடன். அதில் 50 ரூபாய் மீத்துக் கிணற்றை ஆழமாகத் தோண்டுவதில் அதைச் செலவிட்டான்.

காளியக்கா செங்கோடனுடன் வாழலானாள். அவள் வரும்போது அதிர்ஷ்டத்தையும் கூடக் கொண்டு வந்ததாகத் தோன்றிற்று. கிழவியின் வாயு ரோகம் அதிகமாகி வந்ததாயினும் அவள் முணுமுணுப்பதை விட்டு விட்டாள்.

தங்கமான பெண். சோம்பலே கிடையாது. எப்போதும் சிரித்த முகம். வீட்டு வேலை எல்லாம் செய்து, வயலில் பெண்கள் செய்யக் கூடிய வேலையையும் பார்த்துக் கொண்டாள். இதனால் அவள் மாமியார் நாள் முழுவதும் ராட்டையில் உட்கார்ந்து நூல நூற்க முடிந்தது.

சேர்ந்தாற்போல் இரண்டு வருஷமாக மழையில்லை. கண்டிக் கங்காணிகள் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் போய்க்கொண் டிருந்தார்கள். வேளாளப்பட்டியில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் இலங்

கைக்குப் போகலாமா, மலாய் நாட்டிற்குப் போகலாமா என்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நடுவில் வைசூரி வந்து விட்டது. பெனங்கு போகும் பேச்சு தற்போதைக்கு ஓய்ந்தது. பக்கத்துக் கிராமங்களுடன் போக்கு வரவும் நின்று விட்டது. கிராம தேவதையான மகமாயி அம்மாள் திட்டமாகக் கட்டளை பிறப்பித்துவிட்டாள். வழக்கம் போற் பூசாரிமீது ஆவேசங் கொண்டு யாரும் ஊரை விட்டு வெளியே போகவோ வெளியே யிருந்து ஊருக்குள் வரவோ கூடாதென்று சொல்லி விட்டாள். பதினைந்து நாளைக்குள் ஐந்தாறு குழந்தைகள் மயானம் சென்றன. இன்னும் சிலர் படுத்த படுக்கையாய்க் கிடந்தனர்.

அம்மை குத்தும் இன்ஸ்பெக்டர் அவருடைய கருவிகள் ரிஜிஸ்டர்களுடன் வந்து சேர்ந்தார். ஆனால் அவர் வேலை அங்கே நடக்கவில்லை. கிராமவாசிகள் தங்கள் குழந்தைகளைத் தொடவுங் கூடாதென்று சொல்லி விட்டனர். மாரியம்மன் ஏற்கனவே கோபக் குறி காட்டி யிருக்கிறாளென்றும் அம்மை குத்தினால் சாவு நிச்சயம் என்றும் அவர்கள் கூறிவிட்டார்கள். மணியக்காரர்மீது புகார் எழுதுவதாக இன்ஸ்பெக்டர் பயமுறுத்தினார். மணியக்காரர் அவரைச் சமாதானப் படுத்துவதற்காகப் பக்கத்திலிருந்த பறச்சேரிக்கு அவரை அழைத்துப் போய் நிரம்ப வேலை தருவதாகச் சொன்னா. இருவரும் சேரியில் நுழைந்தனர். பலர் பல "சால்ஜாப்புகள்" சொன்னார்களாயினும், மொத்தம் 50 குழந்தைகளுக்கு அம்மை குத்தப் பட்டது. இவ்வளவு பேருக்கும் அம்மை குத்தும் ஊசி

தமிழ்நாடு
இ 11181.
சென்னை 600 008

ஒன்றே தான். விளக்கில் காய்ச்சுதல், மருந்து திராவகம் தடவுதல் முதலியவற்றில் இன்ஸ்பெக்டர் வீண் பொழுது போக்க வில்லை. ஒருவர் உடம்பின் விஷ நீர் இன்னொருவர் உடம்பில் ஏறு திருப்பதற்காக விதிகள் பல புத்தகத்தில் இருப்பது உண்மையே. ஆனால் அவற்றை யெல்லாம் அநுசரித்துக் கட்டாது என்பது அம்மை குத்துவோரின் எண்ணம்.

விதிகளில் சொல்லி யிருக்கிறபடி ஒவ்வொரு முறையும் ஊசியைத் தீயில் காய்ச்சினால் சீக்கிரம் பழுதாய்ப் போய் விடுகிறது. புதிய கருவிகள் கேட்டால் மேலே யுள்ளவர்கள் கோபித்துக் கொள்ளுகிறார்கள். என்னதான் செய்வது? மேலும் கிராமத்து ஜனங்கள் எல்லோரும் முரட் டாத்துமாக்கள். நோய்க் கிருமிகள் அவர்கள் இரத்தத்தில் கலந்தாலே மடிந்து விடுமே! இந்த அநாகரிக ஜனங்கள் எல்லோரும் ஒரே மாதிரி இருக்கிறார்கள். அவர்கள் ஒருவரிட மிருந்து ஒருவர்க்கு நோய்க் கிருமிகள் பரவுவதால் என்ன மோசம் வந்து விடும்?... வேளாளப் பட்டிக்கு அம்மை குத்தும் இன்ஸ்பெக்டர் வந்தது மாரியம்மனுக்குக் கோப மூட்டியதாகவே காணப் பட்டது. சாவுகள் அதிகமாயின. பறச்சேரியிலும் வைசூரி புகுந்தது.

ஏழை வீட்டில் நோய் வந்திருக்கும்போது நீங்கள் பார்த்த துண்டா? ஏழை என்றால், தங்கள் தேவைகளை அநாவசியமாகப் பெருக்கிக்கொண்டு அவை இல்லாத போது அவஸ்தைப் படுகிறவர்களை நான் சொல்ல

வில்லை. தினம் தினம் பசி தீர வயிற்றை நிரப்புவதற்கு அவசியமான உணவுப் பொருள்தானும் இல்லாமல் அதை வாங்குவதற்குப் பணமு மில்லாமல் கஷ்டப் படுகிறவர்களை இங்கு குறிப்பிடுகிறேன். அப்படிப் பட்ட ஏழை வீட்டில் நோயும் புகுந்ததென்றால் அது சகிக்க முடியாத துன்பமாகும். அந்நிலைமையில் நோயாளியும் சரி, மற்றவர்களும் சரி, மரணத்தை ஆவலுடன் எதிர்நோக்குகிறார்கள். செல்வர்கள் வீட்டில் நோய் வந்தால் நோயாளியின் உற்றார் உறவினர் அங்கிருந்து பார்க்கிறார்கள். வைத்திய சிகிச்சைகளுக்கும் பணிவிடைக்கும் குறைவில்லை. இந்நிலைமையில் நோயாளிக்கு அது ஒரு புதுமையான அநுபவமாகவே ஆய் விடுகிறது. வறுமைக் குடும்பத்தில் வரும் நோயின் சங்கதி வேறு. டாக்டருக்குப் பணம் கொடுப்பதைப் பற்றி அவர்கள் கனவு காணவு முடியாது. தாலூக்காப் பட்டணத்திலுள்ள வைத்திய சாலையில் ஏதோ சிகிச்சை இலவசமாகப் பெறலாம். ஆனால் அங்கே கொண்டு போவதற்கு வண்டிச் சத்தம் கொடுக்கவும் முடியாது. நோயாளி சோளம் தின்று செரிக்கக் கூடாத நிலைமையிலிருந்தால் பால் அல்லது அரிசி வாங்குவதற்குங் கூடப் பணம் இராது. காளியம்மனும் உபவாசமும் தான் துணை. அவர்கள் பார்த்து நோயாளியைக் குணப்படுத்தினால் உண்டு. இல்லையேல் மரணம்.

பாவம்! செங்கோடனும் மாரியம்மன் கோபத்துக் காளானான். முதலில் அவன் தம்பிக்கு அம்மை வார்த்தது. பின்னர் அவனுக்குப் பணிவிடை செய்த காளியக்

காவுக்கும் கண்டது. இந்நிலைமையில் கிழவியின் வாயுப் பிடிப்பும் அதிகமாயிற்று. ஒரு மாதம் எல்லோரும் அளவற்ற துன்பமநுபவித்த பிறகு பையன் பிழைத் தெழுந்தான். காளியக்காவும் பிழைத்தாள். ஆனால் அவள் தன் கண்ணொளியை அந் நோய்க்குப் பலி கொடுத்தாள். நோய் நீங்கிக் குணம் பெற்றதாக அறிந்து அவள் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தாள். ஆனால் இருளே கண்முன் தோன்றிற்று. என்றைக்கும் கண்ணொளியை இழந்து விட்டோ மென்று அவள் உணர்ந்தபோது ஒரு நாள் முழுதும் கதறி அழுதாள். கண்ணில் இருந்து நீர் பெருகிற்றே யல்லாது, ஒளி மட்டும் உள்ளே செல்லுவதற்கு இட மேற்பட வில்லை.

லக்ஷ்மிதாஸ் புருஷோத்தமரும் நானும் நூல் நூற்கப்படும் கிராமங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண் டிருந்தோம். அவர் சபர்மதியி லிருந்து ஸ்ரீ சங்கரலால் பாங்கருடன் இந்தப் பக்கங்களில் கதர் வேலை எப்படி நடைபெறுகிறது என்று பார்க்க வந்திருந்தார். கையில் பஞ்சு கொட்டும் வில் ஒன்றுடன் ஊர் ஊராய்த் திரிந்து நூல் நூற்பவர்களை அவர்கள் வீட்டிலேயே பார்ப்பதில நிரம்பப் பிரியம். அவர்களுக்கு நன்றாய்ப் பஞ்சு கொட்டக் கற்றுக் கொடுப்பார். நூல் நூற்பது ஓர் இன்பமான வேலையாயிருக்குமாறு செய்து கொள் வது எப்படி என்று சொல்லுவார். நாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் நூல் நூற்கும் ஸ்திரீகள் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். அவருடைய வில்லின் தொனி

அவர்களைக் குடிசைக் குள்ளிருந்து வெளியே கொண்டு வந்து விடும். வீட்டு வேலைகளை யெல்லாம் போட்டு விட்டு அவர்கள் லக்ஷ்மிதாஸ் பஞ்சு கொட்டுவதைப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள்.

இரண்டு மூன்று கிராமங்களில் சுற்றிய பிறகு வேளாளப்பட்டிக்குப் போய்ச் சேர்ந்தோம். ஒரு சிறு மண் குடிசையின் வாயில் திண்ணையில் ஒரு பெண் உட்கார்ந்து நூற்றுக் கொண்டிருந்தாள்.

"இந்தப் பெண் நூற்பதைப் பார்ப்போம்" என் றார் லக்ஷ்மிதாஸ். "ஆம் வயதானவர்களை விட அதி கமாக நூற்கிறாளா, குறைவாக நூற்கிறாளா என்று பார்க்க வேண்டும்" என்றேன்.

அவள் அருகே நாங்கள் சென்றபோது எங்கள் வரவை அவள் கவனிக்க வில்லை என்று தோன்றிற்று. எனக்கு ஆச்சரியமாயிருந்தது. இக்குடியான ஸ்திரீ கள் புதிய மனிதர்களிடம் நடந்துகொள்ளும் மாதிரியா யிருக்க வில்லை. இன்னும் நன்றாய் உற்றுப் பார்த்த போது அவள் கண்களில் ஏதோ கெடுதல் இருப் பதாகக் கண்டேன். ஆயினும் அவள் நூற்றுக் கொண்டிருந்தாள்.

"உன் கண்களில் என்ன கோளாறு அம்மா?" என்று கேட்டேன்.

அவள் நூற்றுக் கொண்டே யிருந்தாளே ஒழியப் பதில் சொல்ல வில்லை. மற்றொரு திண்ணையில் நூலை வீசணத்தில் சுற்றிக் கொண்டிருந்த கிழவன்

சொன்னான் :— "அவள் கண்களை மாரியாயி கொண்டு போய் விட்டாள் ஐயா!"

"ஐயோ!பாவம்! எத்தனை நாளைக்கு முன்போ?" என்று நடையில் கதவின் ஓரத்திலிருந்த ஒரு ஸ்திரீ கூறினாள்:—'இரண்டு வருஷத்திற்கு முன் ஐயா, பெரியம்மை வார்த்து இப்படியாயிற்று. அதிலிருந்து நாங்கள்தான் சோறு போட்டு வருகிறோம். கட்டிய புருஷன் விரட்டிவிட்டான். பொட்டைக் கணகளுடன் நாள்முழுதும் இராட்டை முன்பு உட்கார்ந்து நூல் நூற்கிறாள். வாரம் எட்டணுக் கிடைக்கிறது. அதைக் கொண்டு உப்பு மிளகாய் வாங்கிக் கொள்ளுகிறோம். அவள் தலையில் எழுதியது இவ்வளவுதான். நாம் என்ன செய்யலாம்?"

இந்தக் கதையைக் கேட்டு லக்ஷ்மிதாஸ் மன முருகி விட்டார். 'அவளுக்கு யார் பஞ்சு கொட்டிக் கொடுக்கிறார்கள்?' என்று கேட்டார்.

அந்த ஸ்திரீ கூறியதாவது:—

அவளுக்கும் எனக்கும் நான்தான் பஞ்சு கொட்டு கிறேன். கிழவர் வீசணத்தில் நூலைச் சுற்றிக் கொடுக்கி றார். எல்லாம் தயார் செய்து அவள் முன்பு ராட்ட னத்தையும், பஞ்சுத்திரிக் கூடையையும் வைக்கிறோம். அவள் நூற்கிறாள். வேறு அவளால் என்ன செய்ய முடியும்?

'நீ அந்தப் பெண்ணின் தாயாரா?' என்று கேட் டேன். 'ஆம், நான் தான் அவளைப்பெற்றேன்', என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டாள்.

'அவள் கணவன் இந்த ஊரிலே தான் இருக்கி றானா?' என்று வினவினேன். இத்தகைய நிர்பாக்கிய வதியான பெண்ணைத் துரத்தியவன் எத்தகைய ராக்ஷ தனா யிருக்க வேண்டுமென எண்ணினேன்.

'ஆம். இங்கே தான் இருக்கிறான். அவன் கிழவ ருடைய தங்கை மகன்தான். ஆனால் பாவம் அவன் தான் என்ன செய்வான்? அவளால் ஒரு வேலைக்கு உபயோக மில்லாதபோது அவளை வைத்துச் சோறு போட்டுத் துணி வாங்கிக் கொடுக்க அவனால் முடியுமா? அவனுக்கும் ஆண்டவன் அதிகமாகக் கொடுக்கவில்லை. மேலும் ஒரு நாளா இரண்டு நாளா? ஆயுள் உள்ள வரையில் அவளை வைத்துக் காப்பாற்ற வேண்டுமே?

'இந்த ஏழை ஜனங்களுக்கு ஈவிரக்கம் பார்த்துக் கட்டாது. பெண்ணாயிருக்கட்டும், மாடா யிருக்கட்டும் வேலை செய்தா லொழிய எவ்வாறு நாம் குறை கூறு வது? அவர்கள் ஏழ்மை அத்தகையது' என்று நான் லக்ஷ்மிதாசரிடம் சொன்னேன்.

லக்ஷ்மிதாஸ் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் கூறியதாவது:—'உண்மைதான். ஆனால் இந்தப் பெண் ணின் விஷயம் மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இந்தப் பக்கத்துக் கிராமங்களில் இன்னும் இம்மாதிரி நூல் நூற் கும் கண்ணில்லாப் பெண்கள் யாராவது இருக்கிறார் களா?"

இந்தக் கேள்வி கேட்டதும் அவர்கள் எல்லோ ரும் பேசத் தொடங்கினார்கள். அவரவர்களுக்குத்

தெரிந்தவரை கண் தெரியாமலே நூல் நூற்பவர்களைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார்கள்.

"அம்மா! நூல் நூற்பது உனக்குச் சந்தோஷமாயிருக்கிறதா?" என்று அப்பெண்ணைப் பார்த்து லக்ஷ்மிதாஸ் கேட்டார்.

'சந்தோஷந் தான். இல்லாவிடில் என் வாழ்க்கை எவ்வளவு அலுப்பாயிருக்கும்? காலை எழுந்தது முதல் இரவு தூங்கும் வரையில் என்ன செய்வது? பொழுதே போகாது. மேலும் ஏதாவது கொஞ்சம் வேலை செய்யாமல் என் தாய் தகப்பன்மாரைச் சோறு போடும்படி எப்படிக் கேட்பது?

கிழவன் கூறினான்:— 'நாங்கள், ஏழை ஜனங்கள் சுவாமி! தினம் ஓர் அணா என்றால் எவ்வளவோ பெரியது! இல்லாவிடில் எங்கள் பாடு நிரம்பக் கஷ்டமாய் விடும். புருஷன் துரத்தி விட்டான். ராட்டை தான் அவளுக்குப் புருஷன். சோறு போட்டுக் காப்பாற்றுவதும் இராட்டை தான்."

'இந்த அநுபவத்தை என்றென்றும் மறக்க முடியாது. இராட்டையின் இயக்கத்தில் எனக்கிருந்த நம்பிக்கை இப்போது நூறு மடங்கு பலப்பட்டு விட்டது' என்றார் லக்ஷ்மிதாஸ் புருஷோத்தமர்.

நேயரே! இதை வெறுங் கதையென்று எண்ணிக் கொண்டு போகாதீர். இன்றையத் தினம் கதர் வேலை நடக்கும் கிராமங்களுக்குச் சென்றீரானால் மேற்படி கபோதி காளியக்காளையும், அவளைப் போன்ற மற்றவர்களையும் நேரே பார்க்கலாம். நமது ஏழை நாட்டில்

ஏழை மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாமல் காக்கும் உபாயம் ராட்டினம் ஒன்றே யாகும். அவ்வாறே கோடிக் கணக்கான ஜனங்களுக்கு முதுமைப் பருவத்தில் உபகாரச் சம்பளமும், நோய், நொக்காடு முதலிய ஆபத்துக்காலங்களில் உதவியும் அளிப்பதற்கு ராட்டினமே சிறந்த சாதனமாகும். உமது உபயோகத்துக்காகச் சில கஜம் துணி வாங்கும் போது அதே சமயத்தல் நொந்து போனவர்கள், அங்க வீனமானவர்கள், அநாதைகள் முதலியோருக்கு உணவும் உடையும் அளிப்பதாயிருந்தால் உமக்கு அது மகிழ்ச்சி தராதா? கதர் முரடாகத் தான் இருக்கிறது. ஆனால் மக்களின் பரஸ்பர உதவிக்கு அது அறிகுறியன்றோ? எனவே கதரைவிட அழகிய துணி வேறே எது உண்டு?

வஞ்சக வியாபாரி.

லண்டன் செஷன்ஸ் கோர்ட்டில் ஜார்ஜ் வாட்சன் என்னும் ஒரு ஐரோப்பியன் விஸ்கிச் சாராய மென்று வர்ணம் கலந்த தண்ணீரை ஸ்திரீகளுக்கு விற்றுப் பணம்பறித்ததாகச் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணையில் எதிரிக்கு இருக்க இடமும் உண்ண உணவும் இடையாதென்று கூறப்பட்டது. தன்னை ஒரு மதுபானக் கம்பெனியில் ஏஜண்டு என்றும் தன்னால் குறைந்த விலைக்கு மதுபானம் விற்க முடியு மென்றும், எதிரி கூறி வர்ணத் தண்ணீரைப் போத்தல்களில் நிரப்பிப் பலருக்கு முக்கியமாக ஸ்திரீகளுக்கு விற்றதாகக் கூறப்பட்டது. காரணம கேட்டபொழுது எதிரி வேலையில்லாத் திண்டாட்டத்தால் மிகவும் கஷ்டப்பட்டதாகவும் வயிற்றுப் பிழைப்பிற்காக இந்த மோசத்தொழிலைச்செய்ய ஆரம்பித்ததாயும், மோட்டார்த் தொழில் முன்னேற்றத்தால் குதிரைச் சேணங்கள் தைக்கும் தன்னுடைய தொழில் க்ஷீணமடைந்து போய் விட்டதாகவும கூறினான். நீதிபதி எதிரிக்கு 12 மாதம் காவல் தண்டனை விதித்தார்.

அதிக ஆசை அதிக நஷ்டம்

(432 பக்கத் தொடர்ச்சி)

இருந்தாலும் வெளிக்குக் காட்டாமல் "நண்பா, நீ ஏன் இங்கு வந்தாய்? உனக்கு என்ன ஆபத்து நேர்ந்தது? நீ தான் தோட்டத்திற்குக் கூட வரவில்லையென்று சொன்னாயே, நேற்றிரவு" என்று கேட்டான்.

முத்தையன் "இவனிடத்தில் உண்மையைச் சொன்னால் இவன் நம்மை வெறுப்பான்" என்று நினைத்து "அப்பா, குமரேசா புதையல் காணாமற் போன துக்கத்தினால் எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. நீ தனியாகத் தோட்டத்தில் கஷ்டப்படுவாயே என்று நினைத்துக் கொண்டேன். உடனே புறப்பட்டு வந்தேன். தோட்டத்திலிருந்த ஒரு பெரிய சர்ப்பம் என்னைத் தீண்டக் கீழே விழுந்தேன். பிறகு நடந்தது எனக்கு ஒன்றும் தெரியாது. உன்னை இப்போது இங்கே பார்க்கிறேனே இதுதான் தெரிகிறது" என்றான். குமரேசன் தனக்குள் "இவன் அயோக்யத்தனம் இன்னும போகவில்லை. வஞ்சக நெஞ்சம் படைத்தவர்கள் எப்போதும் வஞ்சகர்களாகவே தான் இருப்பார்கள் என்று தெரிகிறது. இருக்கட்டும் பார்ப்போம்" என்று நினைத்து "ஐயோ பாவம்! எனக்கு உபகாரம் செய்ய நினைத்து வந்த உனக்கு இப்படி ஆபத்து நேர்ந்ததே! இருந்தாலும் சமயத்தில் நான் வந்து சேர்ந்து கொண்டது தான் விசேஷம். சற்று முன் உன்னைப்பார்த்தேன். மனங் கலங்கினேன். பாம்பு கடித்துத்தான் இறந்திருக்க வேண்டுமென்று நினைத்துப் பாம்புக்கடி பச்சை இலை கொண்டு வந்து நச்யம் பிழிந்தேன். நீயும் உயிர் பிழைத்தெழுந்தாய். இன்று முதல் மூன்று நாள் நீ பத்யமாய் இருக்க வேண்டும், எழுந்து வா! மெதுவாக வீடு செல்வோம்" என்றான்.

குமரேசன் முத்தையனை மெதுவாகப் பக்கத்துக் கட்டுக்கரைக்கு (வயல்களின் மத்தியில் உள்ள விசாலமான பாதை) அழைத்துச் சென்று அதன் வழியே அவனுடன் வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். அவர்கள் சற்று தூரம் சென்றதும் வழியில் நான்கு பேர் குத்துண்டு இரத்தப் பிரளயமாய்க் கிடப்பதைக் கண்டார்கள். இப்படிக் கிடக்கக் காரணமென்னவென்று பிரமிப்புக் கொண்டு ஆச்சரியப்பட்டுக் கீழே கிடப்பவர்களை உற்று நோக்கினார்கள். எல்லோரும் பிரக்ஞையற்றிருந்தபோதிலும் அவர்களுக்குச் சுவாசம் மாத்திரம் ஓடிக்கொண்டிருந்தது. குமரேசன் அது கண்டு சிறிது சந்தோஷங்கொண்டு பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த அருவிக்குப் போய் அதில் தன் மேல் வேஷ்டியை நனைத்து எடுத்துக் கொண்டு வந்து ஒவ்வொருவர் வாயிலும் சிறிது சிறிது ஜலம் பிழிந்து பிறகு முகங்களிலும் தெளித்தான். அவர்களும் சிறிது சிறிதாகக் களை தெளிந்து பிரக்ஞையடைந்தார்கள். குமரேசன் தனக்குள் "இன்று நல்ல நாள்! இன்று தான் நான் ஜென்மாந்திரத்தில் செய்த புண்ணியம் பலித்தது. இவ்வளவுயிர்களைப் பிழைப்பிக்கும் பாக்கியம் கிடைத்ததே" என்று

நினைத்து மகிழ்ந்தான்; இவர்கள் தான் காடன் கூட்டாளிகளாயிருக்க வேண்டுமென்று கருதி மெதுவாக அவர்களின் வரலாற்றையும், அவர்கள் குத்துண்டதன் காரணத்தையும் வினவினான். அவர்களில் நன்றாகத் தெளிவடைந்த மூவர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து தாங்கள் திருடர்கள் என்பதை எப்படிச் சொல்வதென்று யோசித்து, விழித்தார்கள். குமரேசன் அவர்களுக்குக் கொஞ்ச ஜலம் குடிக்கக் கொடுத்து மறுபடியும் கேட்டான். அவர்கள் உண்மையைச் சொன்னால் தங்களுக்கு ஆபத்தாக முடியும் என்று நினைத்து அவர்களில் ஒருவன் தாங்கள் வழிப்போக்கர்கள் என்றும் விடியற்காலம் இவ்வழியாக வந்து கொண்டிருந்த போது பத்துப் பதினைந்து திருடர்கள் வந்து திடீரென்று தங்களைத்தாக்கிக் குத்திக் கீழே தள்ளித் தங்களிடமிருந்த ஆடையாபரணங்களையெல்லாம் பிடுங்கிக் கொண்டு போய் விட்டதாகச் சொன்னான். இப்படிச் சொல்லி வாய் மூடு முன் அவர்களில் நான்காமவன் களை தெளிந்து சற்றுப் பிரக்ஞையடையும் போதே "காடா, புதையல் பத்திரம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான். எழுந்ததும் தன் கூட்டாளிகளைத் தவிர வேறு இருவர் தன்னெதிரில் இருக்கக் கண்டான்; திடுக்கிட்டான்! மற்ற மூவர் முகங்களும் வெளுத்தன. இவைகளைக் கவனித்த குமரேசன் காடன் குறிப்பிட்ட திருடர்கள் இவர்கள் தானென நிச்சயங் கொண்டு "காடனாவது புதையலாவது! அவர் சொல்லுகிறாரே அதென்ன" வென்று

கேட்டான். அதற்குத் திருடர்களில் நான்காமவன் 'எனக்குப் புதையல் கிடைக்குமென்று ஜோஸ்யர் ஒருவர் சொல்லியிருக்கிறார்! அதே ஞாபகம் எனக்கு எப்போதும். ஒருவேளை அதைச் சொல்லியிருப்பேன்" என்றான். குமரேசன் "நல்லது, புதையலைப் பற்றிய வரையிலும் சரி. காடன் என்பது யார்? இவனைப் பற்றி இங்கு பிரஸ்தாபிக்க வேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டான். அதற்கு அவன் "அந்த ஜோஸ்யர் காடன் என்பவன் மூலமாக அப்புதையல் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்" என்றான்.

குமரேசன் "திருடர்களுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்! என்ன சமயோசிதமான புத்தி! அவர்கள் வாயில் சாமான்யமாக உண்மைவராதென்பது கண்டோம்" என்று ஆச்சரியப்பட்டு "திருடர்களுடைய உடை உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டான். திருடர்கள் ராத்திரி வேளையில் பிரயாணம் செய்தபடியால் திருடர்கள் உடையை யணிந்து கொண்டு வந்தால் திருடவரும் திருடர்கள் நம்மையும் திருடர்களாக மதித்து ஒன்றும் செய்யாமல் போவார்கள் என்று நினைத்து இவ்வுடை யணிந்து வந்தோம்" என்றார்கள். இதைக் கேட்ட குமரேசன் அதிக ஆச்சரியமடைந்து "அங்கு ஒருவன் கத்தியால் குத்துண்டு குத்துயிராய்க் கிடக்கிறான். அவனும் உங்களைச் சேர்ந்தவன் தானோ?" வென்று கேட்டான். திருடர்கள் "இருக்கலாம்—நாங்கள் ஐவர் வந்தோம்" என்றார்கள். "ஆனால் பார்க்கலாம் வாருங்கள்" என்று சொல்லிக்

குமரேசன் அவர்களைக் கூட்டிக் கொண்டு காடன் இருந்த இடத்திற்கு வந்தான். காடன் மறுபடியும் களை தெளிந்து சிறிது மயக்கத்தோடிருந்தான். அவன் தன் கூட்டாளிகளைக் கண்டதும "அண்ணே புதையல் பூட்டுதே! யாரோ ஒருவன் என்னைக் குத்திக் கீழே தள்ளி விட்டுப் புதையலைப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டான்! ஐயோ! நாம் பட்டபாடெல்லாம் வீணாகப் போச்சுடா" என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் முத்தையன் முகம் வெளுத்தது. குமரேசன் அதைத் தெரிந்து கொண்டும் தெரியாதவன்போல் காடனுக்கு மறுபடியும் கொஞ்சம் ஜலம் கொடுத்தான்—காடனும் களை தெளிந்து எழுந்தான். குமரேசன் சந்தோஷப்பட்டுத் திருடர்களைப் பார்த்து "உங்களில் ஏதோ விசேஷம் நடந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. புதையலைப்பற்றி நீங்கள் பேசுகிறீர்களே! நடந்ததென்ன? சொல்லுங்கள்" என்றான். திருடர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து நடந்ததைச் சொல்லத் தயங்கினார்கள். குமரேசன் "உங்களைப் பாரத்தாலே திருடர்கள் மாதிரி இருக்கிறது. உங்களிடத்திலிருந்து திருடிக் கொண்டு போகிறவர்களும இருப்பார்களா? உண்மையைச் சொல்லா விட்டால் இப்போதே உங்களைக் கைது செய்து தண்டனைக்குள்ளாக்குவேன். நடந்ததைச் சொல்லி விட்டால் இப்படியே உங்கள் பெண்சாதி பிள்ளைகளிடம் போய்ச் சேரலாம். சீக்கிரம் சொல்லுங்கள்" என்று அதட்டினான்.

திருடர்களில் ஒருவன் "ஸ்வாமி எங்களுக்குக் கிடைத்த தண்டனை போதும். உண்மையைச் சொல்லுகிறேன். எங்களை விட்டு விடுங்கள்" என்று தாங்கள் திருடப்போனதுமுதல் நடந்தவைகளை யெல்லாம் விபரமாகச் சொல்லி முடித்து "நாங்கள் கொண்ட பேராசையினால், கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விட்டது" என்று மிகவும் வருத்தப்பட்டான். திருடன் சொல்லிக்கொண்டு வரும்போதே முத்தையன் நெஞ்சும் மார்பும் பட பட வென்று அடித்துக் கொண்டிருந்ததுடன் "நாம் நம்முடைய கூட்டாளியை மோசம் செய்ததால் நமக்கு இரண்டுமுறை புதையல் கிடைத்தும் நம்மிடம் தங்காமல் போய்விட்டது. மித்திரத் துரோகம், நம்பிக்கைத் துரோகம் இவைகள் மிகவும் கொடியவை" என்று தனக்குள் வருந்திக் கொண்டே யிருந்தான்.

விஷயத்தை விஸ்தாரமாகத் தெரிந்து கொண்ட குமரேசன் திருடர்களை அனுப்பிவிட்டு முத்தையனுடன் வீட்டுக்குப் புறப்பட்டான். வழியில் "நமக்குக் கிடைக்க வேண்டிய புதையலை யாரோ எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அது திருடர்கள் கையிலகப்பட்டுப் பிறகு அவர்களுக்கும் நமக்கு மில்லாமல் யாரிடமோ சேர்ந்து விட்டது! என்ன மாயம்! இதனால் 'எதுவும் கொடுத்துவைத்தவர்களுக்குத் தான் கிடைக்கும்' என்று பெரியோர் சொல்வது சரியாய் விட்டது பார்த்தாயா?" என்று முத்தையனிடம் பேசிக் கொண்டே போனான். முத்தையனோ "பஞ்சமா

பாதகங்களிலொன்றாகிய மித்திரத் துரோகம் செய்யத் துணிந்து "புதையலை இரண்டு முறை கைக்கொண்டும் அது நமக்குக் கிடைக்க வில்லையே. கடவுள் செயல் தனியாக இருக்கிறது. கடைசியில் சிநேகிதனை வஞ்சித்த பாபத்திற்குள்ளானோமே, அதுதான் மிச்சம்" என்கிற யோசனையி லாழ்ந்து வருத்தப்பட்டவனாய்ப் பேச நாவெழாமல் குமரேசனுடன் நடைப்பிணமாக நடந்தான்.

முத்தையன் வருத்தப்படுவதைக் கண்ட குமரேசன் அவனை வீட்டிற் கொண்டுபோய் விட்டுப் போக வேண்டுமெனக் கருதி அவனுடன் பேசிக் கொண்டே முத்தையன் வீட்டுக்குபோய்ச் சேர்ந்தான். முத்தையனுக்கோ வருத்தமேலீட்டினால் தான் தன் வீடு வந்து சேர்ந்தது கூடத் தெரியவில்லை. இருவரும் வீட்டிற்குள் நுழைந்து பட்டாசாலையை யடைந்தார்கள். கன்னவாசல் குமரேசன் கண்ணில் பட்டது. குமரேசன் உடனே "நண்ப! இது என்ன, இது! திருடர்கள் கன்னம் போட்டிருக்கிற மாதிரி தெரிகிறதே! நீ வெளியே போயிருந்தபோது திருடர்கள் கன்னமிட்டு வீட்டிலுள்ளவைகளைத் திருடிக் கொண்டு போய் விட்டார்களா? என்ன? நீ எனக்கு உபகாரம் செய்யவெண்ணித் தோட்டத்திற்கு வந்தபோது அங்கு உன்னைப் பாம்பு கடித்தது, போதாமல் வீட்டில் வேறு திருட்டுப் போய்விட்டாற் போல் இருக்கிறதே! உன் பெண்சாதியைக் கூப்பிட்டுக் கேள்" என்றான். முத்தையன் துக்கம் பொறுக்கமாட்டாதவனாய்த் தழு

தழுத்த குரலுடன் "அப்பா குமரேசா, நான் துரோகி, பாதகன், வஞ்சகன் இதுகாறும் இணைபிரியாது என்னிடம் நேசம் பாராட்டி வந்த உத்தம நண்பனாகிய உனக்குத் துரோகம் நினைத்து உன்னை வஞ்சித்தேன்! என்னை நீ மன்னிப்பாயாக" என்று சொல்லிக் கண்களிலிருந்து மளமள வென்று கண்ணீருகுத்தான்.

குமரேசன் ஒன்றும் தெரியாதவன்போல் "முத்தையா, ஏன் இப்படிப் புலம்புகிறாய்? என்ன நேர்ந்தது. நீ எனக்கு ஒன்றும் செய்யவில்லையே" என்று கேட்டான். (வரும்)

மனதிற்குறுத்துமதி

(1) வழி நடந்தா லன்றித் தொலையாது;
கடன் கொடுத்தா லன்றித் தொலையாது;
அதுபோல் பாடம் படித்தாலன்றி வராது.

(2) கோபம் அடக்கினாலன்றி அடங்காது;
சாபம் கோபத்தினாலன்றிப் பிறவாது;
அதுபோல்—தீமை யெண்ணினாலன்றிச் சிநேகம் போகாது.

(3) சிலை உளிபட்டாலன்றி உருவமாகாது;
பஞ்சு நூற்றாலன்றி ஆடையாகாது;
அதுபோல், பாடுபட்டாலன்றிப் பணம் வராது.

(4) மரம் பழுத்தாலன்றி வௌவால் வராது;
பணம் தேடினாலன்றிப் பெருமை யேற்படாது;
கல்வி பயின்றாலன்றி யோக்யதை யேற்படாது.

(பாரதி.)

கர்ணனும்—கண்ணனும்

பாண்டவர் வனவாசஞ் செய்து வந்த பின்பு துரியோதனன் அவர்களுக்குரிய நாட்டை அவர்கட்குக் கொடுக்க மறுத்தபடியால், இருதிறத்தாருக்கும் குருக்ஷேத்திரத்தில் போர் மூண்டது. அந்தப் போர் பதினெட்டு நாள் நடந்தது. அந்தப் பதினெட்டு நாள் யுத்தத்தின் விபரமெல்லாம் பாரதத்திற் படிப்போமானால் வெகு பயங்கரமாக இருக்கும். இப்படியுமொரு யுத்தம் நடந்திருக்குமா என்று தோன்றும்.

அப்படிப்பட்ட யுத்தத்தில் பதினேழாவது நாட் போரில் கௌரவருக்கு அருந்துணையாயிருந்த கர்ணனோடு அர்ச்சுனனும் சண்டை செய்தான். இருவரும் நிகரற்ற வில்லாளிகளாகையினால் இவர்களுடைய சண்டை வெகு பயங்கரமானதாயிருந்தது. அர்ச்சுனன், கர்ணனோடு நெடுநேரம் போர் செய்து பார்த்தான். அவன் களைத்துச் சோர்வுறாமல் நின்றமையினால், கடுங் கோபங் கொண்டு கூர்மை பொருந்திய அநேகங் கோடி சாயகங்களை (அம்புகளை), மனோவேகத்திலும் மிஞ்சிய வேகமாய்ச் சென்று தாக்கும்படி யெய்தான். அக்கணைகளினால் இரதகஜ துரகபதாதிகள் சிந்திச் சிதைந்து உயிர் துறந்தன.

கர்ணன் அதுகண்டு வெகுண்டு இடக்கையில் வில்லும் வலக்கையில் நாணுமிழுத்துச் சீறிக் கோடி

கோடியாய்க் கும்புகும்பலாய், நிறை நிறையாய், வரிசை வரிசையாய்ப் பந்தி பந்தியாய்ப் பார்த்தன் மேல் அவன் மேனி முழுதும் மூடும்படி கடுங்கணைகளை முடுக்கினான்.

அர்ச்சுனன் அது கண்டு மலைத்தான். அவனுடைய சாரதியாகிய கண்ணபிரானும் அச்சமயம் புளகாங்கிதமடைந்தார். பாண்டவர் படைகளும் பெருமூச் செய்தினர். மற்றவரெல்லாம் பெரிய ஆரவாரஞ் செய்தனர்.

இச்சமயத்தில் பார்த்தசாரதி யானவர் கையமர்த்தி, அர்ச்சுனனை நோக்கி அவனிடமிருந்து சில கணைகளை வாங்கித் தமது திருக்கரங்களாற் பரிசித்து "இவைகளைத் தூண்டு" என்று கொடுத்தார்.

அர்ச்சுனன் அக்கணைகளைக் காண்டீபத்திற் பூட்டியெய்தான். அவைகள் கர்ணனைத் தாக்கி அவனுடலைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தன. இந்நிலையையடைந்ததும் கர்ணன் சோர்ந்து தேரிற் சாய்ந்தான். ஆயினும் அவனுடைய கரங்கள் கார்முகம் வளைப்பதும் கடுங்கணை தொடுப்பதுமாகிய வேலையைத் தளராமற் செய்துகொண்டிருந்தன.

அதுகண்டு அர்ச்சுனன் வியப்புற்று "இன்னும் கர்ணன் பாணம் விடுகிறானா?" என்று இயம்பிக் கடுஞ்சினங் கொண்டு கனற்பாண முதலியவைகளைக் கடையுக மாரி போல் இடைவிடாமற் பொழிந்தான். பிரக்ஞை தப்பித் தேர்மேற் கிடக்கும் கர்ணன் மேல் அர்ச்சுனன் விடுங்

கணைக ளெதுவும் படவொட்டாமல் தருமதேவதை முன்னின்று கவளீகரித்து வந்தது.

இந்த இரகசியத்தை யறிந்த கண்ணன் காண்டீ பனைப்பார்த்து நீ எத்தனைகாலம் நின்று எத்தனை கோடிப் பாணங்களை யெய்தாலும் அவைகள் அந்தக் கர்ணனை ஒன்றும் செய்யமாட்டா. தருமதேவதை அவனுக்கு முன்னின்று நீவிடுங்கணைகளைக்கவளீகரித்து அவனைக்காக்கின்றது. ஏன் பாணங்களை வீணாக்குகிறாய்? சற்றுநேரம் சண்டையை நிறுத்து. நான்போய்ப் பார்த்து வருகிறேன்" என்று கூறிச் சண்டையை நிறுத்தும்படி சொல்லிவிட்டு இரதத்திலிருந்து இறங்கிப் புறப்பட்டுக் கர்ணனிடம் போய் ஓர் அந்தணனாக நின்று "கர்ணமகாராஜனே, ஏழைகளுக்கு அவர்கள் விரும்பியவைகளை யெல்லாந் தடையறக் கொடுப்பதுமல்லாமல் இன்னும் விரும்புகிறவைக ளேதேனு முண்டோவென்றுபசரித்துக்கேட்டு அளிக்கின்றதாதா தாங்கள்என்றுகேள்விப்பட்டேன். நான்மகாமேருபருவதச்சாரலிலே தவம்புரிந்துகொண்டிருப்பவன்; தரித்திரமென்னும்நோயினால் மெலிவுற்றுவருந்துகிறவன். உமது கீர்த்திகேட்டு இங்கே ஓடிவந்தேன்; "ஐங்காதம்போனாலும் தன்பாவம் தன்னோடே என்பதுபோல் நான் வந்ததற்கும் நீர் நொந்ததற்கும் சரியாயிருக்கிறது. இது நான் செய்த பாவம். போகட்டும். எப்படியும் உம்மை வந்து கண்டு விட்டேன். இப்போது என் சிறுமை நீங்கும்படியாய் நாளை பின்னை யென்று சொல்லாமல் இந்த

வேளையில் உம்மாலியன்ற பொருள் ஏதேனும் ஒன்று உதவி யனுப்புவீர்!" என்றார்.

இதைக் கேட்ட கர்ணனும் பெருமகிழ்ச்சியடைந்து தன் உடற்றுன்ப மறந்து, புன்முறுவலுடன் அந்தணனை நோக்கி, "இந்த ஈன தசையிலிருக்கின்ற நான் இப்போது உமக்குத் தரத்தக்க பொருள் யாதாம்? அதனைச் சொல்லும்" என்றான்.

கண்ணபிரான் வந்து, "ஐயா, இப்போது உம்மைக் காத்துவரும் புண்ணிய மெல்லாம் எனக்குக் கொடும்" என்று கேட்டார்.

கர்ணன் அச் சொல் கேட்டதும் உள்ளமகிழ்ந்து ஆநந்த வெள்ளத்தாழ்ந்து, "என்னுடைய பாக்கியமே பாக்கியம்! என் கையிலில்லாத வஸ்துவைக் கேட்டு எனக்கு லோபத்துவம் நாட்டி நீரும் பயனடையாமல் எங்கே வீணாய்ப் போகின்றீரோ? இப்போதென் கையிலில்லாத எதைக் கேட்பீரோ-என்றெண்ணிக் கொண்டிருந்த எனக்கு இச்சை விளையும்படியாய் என்னிடத்திற்பெறும்பொருளாயிருந்த பேறறத்தைக் கேட்டீரே! இதுவே போதும்—

'ஆவியோ நிலையிற் சலக்கிய தியாக்கை
அகத்தவோ புறத்தவோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந் தன்னில் வந்திலையால்
ஓவிலாதியான் செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்க நீ யுனக்குப்
பூவில் வாழயனும் நிகரல வென்றால்
புண்ணியமதனினும் பெரிதோ?—என்றான்.

அதாவது—என்பிராணனே நிலேவிட்டு மேனேக்கி யெழுந்து கலங்கிப் பிரிந்து போயிருக்கிறது. அது உடலுக்குள்ளே இருக்கின்றதோ அல்லது வெளிப்பட்டு விட்டதோ நானறிய மாட்டேன். ஆனல் வேண்டினவர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்துக்கொண்டிருந்த அந்தப் பக்குவ காலத்தில் நீர் வாராமற்போனீர். அப்பேர்ப்பட்ட காலத்தில் உமக்குக் கொடுத்து நன்மையைப் பெறுவதற்குப் பாக்கியம் பண்ணுத பாவியாயிருந்தேன். உம்முடைய சொரூபத்தைப் பார்க்கும்போது உமக்குப் பிர்மதேவரும் நிகராக மாட்டாரென்று தோன்றுகிறது. திருவடி வருந்த வந்த தேவரீருக்கு நான் கொடுக்கப்போகிற சொற்பமாகிய இப்புண்யம் ஒரு விஷயமோ? ஆயினும் உமதிஷ்டப்படி இதோ தருகின்றேன்"—என்று கூறித் தண்ணீர் வரவழைத்துத் தாரைவார்த்துத் தானங்கொடுப்பதற்குள் பிராணன் பிரிந்து போய்விடுமோ என்றும் அதற்குள் மனம் வேறுய்விடுமோ என்றும் கருதி, தன் உடலில் தைத்திருந்த அர்ச்சுனனுடைய பாணங்களில் ஒன்றைப் பிடுங்கி அதன் வழியே பெருகிய இரத்தத்தைக் கரத்திலேந்தி, "நான் செய்த புண்ணிய மெல்லாம் என்மனப் பூர்வமாகத் தத்தம் பண்ணினேன்" என்று கூறிக் கண்ணன் கரத்தில் தாரைவார்த்தான்.

இவ்வாறு தானமேற்ற கண்ணன், கர்ணனைப் பார்த்து, "சந்தோஷம்! உமக்கு ஏதாவது வரம் வேண்டுமானல் கேட்கலாம்" என்ருர்.

"கர்ணன் எனக்கொரு குறைவுமில்லை. நான் இனிமேற் பிறக்கப்போகிறதில்லை. ஒருவேளை வினைவசத்தாற் பிறப்பேனுனல், இல்லை யென்றேன்னிட மிரப்பவர்க்கு நானும் இல்லை யென்று சொல்லாமல் இரக்கத்துடன் ஈயும்படியான மனம் எனக்குண்டாகும்படி அருள் புரிய வேண்டும், இதுவே யான் கருதிய வரம்" என்று கேட்டான்.

கண்ணபிரான் கேட்டு மகிழ்ந்து "நீர் எத்தனை பிறவியெடுத்தாலும் அந்தப் பிறவிகள்தோறும் உம்மை யடுத்துக்கேட்பவர்க்கு இல்லை யென்று சொல்லாமற் கொடுக்கும்படியாகிய மனமும் அதற்கேற்ற தனமுமுடையவ ராகவிளங்குவீர்" என்று வரமளித்து, மேகச்யாமள வர்ணராய், சங்கம், சக்கரம், தனுசு, வாள், தண்டம் என்னும் பஞ்ச ஆயுதங்களுடன், முன்னம் முதலையின் வாய்ப்பட் டலறிய கஜேந்திரன் முன் தோன்றியதுபோல் இப்போது கர்ணன்முன் விளங்கினுர்.

அப்பொழுது தேவகணங்களும் பூதகணங்களும் 'ஜயாவிஜயீபவா' என்று கூறி மலர்மாரி பெய்தனர். கர்ணன் இந்த அற்புதக் காட்சிகண்டு ஆனந்த பரவசனுய்—

"அருந்தழன்மா மகம்புரிந்தும் கடவுட் கங்கை
ஆதியாம் புனல்படிந்து மனில யோகத்
திருந்துமணி மலர்தூவிப் பூசைநேர்ந்தும்
எங்குமா கியவுன்னை இதயத் துள்ளே
திருந்தநிலை பெறக்கண்டும் போக மெல்லாம்
சிறுக்கியனைத் துயிருக்கும் செய்ய வொண்ணுப்
பெருந்தவங்கண் மிகப்பயின்றும் பெறுதற் கெட்டாப்
பெரும்பயனின் றிருவருளாற் பெறப்பெற்றேனே.!

"நீலநெடுங் கிரியுமழை முகிலும் பவ்வ
நெடுநீரும் காயாவு நிகர்க்கு மிந்தக்
கோலமுமெங் கதைவாளுஞ் சங்கு நேமி
கோதண்ட மெனும்படையுங் குழையுங் காதும்
மாலைநறுந் துழாய்மார்புந் திரண்ட தோளு
மணிக்கழுத்துஞ் செவ்விதழும் வாரி சாதக்
காலைமல ரெனமலர்ந்த முகமுஞ் சோதிக்
கதிர்முடியு மிம்மையிலே கண்ணுற் றேனே!

"தருமன்மகன் முதலான வரிய காதல்
தம்பியரோ டெதிர்மலைந்து தறுக ணாண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர்கோவுக்
குரைபெறுநற் கவசமுங்குண் டலமு மீந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் தவழ்ந்தருளும் செங்கண் மாலே
மாதவத்தா லொருதமியன் வாழ்ந்தவாறே.

"வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தான் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாயலங்கற் களப மார்பும்
திருப்புயமுந் தைவந்து தீண்டப் பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினா லழிந்து வீழ்ந்தும்
உணர்வுடனின் திருநாம முரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னை யன்றி
இருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற் றாரே—
என்று துதித்தான்; கரங்கூப்பித் தொழுதான்.

கண்ணபிரான் அதுகேட்டு மகிழ்ந்து— "கர்ணா! உன்னிடத்திலே எனக்குப் பரிபூரணமான கிருபை யுண்டு. உன்னைச் சீக்கிரம் என்னிடம் வரவழைத்துக் கொள்ள எனக்கு விருப்பம். ஆதலால் நான் இவ்வாறு உன் புண்ணியத்தை யேற்றேன். இதோ இப்போது அர்ச்சுனனுடைய பாணத்தினால் நீ ஆவியை இழப்

பாய்! அப்பால் என்பால் வருவாய்!" "என்று கூறி மறைந்து அர்ச்சுனனிடம் சாரதியாயமர்ந்து, கர்ணன் மேல் பாணப்பிரயோகம் செய்யும்படி அவனைத் தூண்டினார்.

அர்ச்சுனன் உடனே அஞ்சரீகம் என்னும் பாணமெய்தான். அது கர்ணன்மேற் பட்டதும் அவன்பூமியிற் சாய்ந்தான். அப்போது அவன் கருட வாகனத்தில் மகாவிஷ்ணுவையும் ரிஷபவாகனத்தில் சிவபெருமானையும் கண்டு வணங்கிய வண்ணம் வீர சொர்க்கம் போய்ச் சேர்ந்தான்.

பிள்ளைகளே, கர்ணனுடைய கொடை அக்காலத்தில் இவ்வாறு விளங்கியபடியால் அவனை இக்காலத்திலும் — கர்ணன் கொடைபோல் — என்றும் — கொடையிற் கர்ணன் — என்றும் — கொடையைப் பற்றிப் பேசச் சமயம் வந்தபோதெல்லாம் பேசி மகிழ்கிறோம். கர்ணன் "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று"—என்று பெரியார் கூறியிருப்பதற் கேற்பப் புகழுடன் பிறந்தவன். அவனுடைய பேரும் புகழும் உலகமுள்ளவரைக்கும் நிலை பெற்றிருக்கக் கூடியவை யாகையால் அவன் சிரஞ்சீவியாய் இருப்பதற்கு நிகரான மகாநுபாவனாவன்.

உலகத்தில் புகழுடம்பை நிலை நாட்ட விரும்புகிறவன்—ஏழை மனமகிழ வரையாது கொடுக்கும் வள்ளலாக விளங்க வேண்டும். கொடை யொன்றே புகழை நிலை நாட்டுவதாம்! மறுமையையும் நல்கக் கூடியதாம்! பொருளை யடைவது பெரிதல்ல. பொருளினாற் புகழையும் புண்ணியத்தையும் அடைவதுதான் பெரிது!

ஸுகாதாரம்.

க்ராம ஸுகாதாரத்தில் சீர்திருத்தங்கள்.

க்ராமங்களிலுள்ள ஸுகாதாரக் குறைகளும் அவைகளை நிவர்த்திக்கும் வழிகளும்.

க்ராமங்களிலுள்ளவர்களின் ஒற்றுமைக் குறைவாலும் அறிவீனத்தாலுமே ஸுகாதாரக்குறைகள் நேருகின்றன. அவைகளைக் கண்டறிந்து நிவர்த்திக்க வழி தேடவேண்டும். க்ராம ஸுகாதாரங்களைக் கவனிக்கவும், சிறு வ்யவகாரங்களை தீர்த்துவைக்கவும், க்ராமங்கள் தோறும் பஞ்சாயத்து ஸபை நியமிப்பது அவச்யம். அந்தப் பஞ்சாயத்து ஸபைகளும் க்ராம ஜனங்களும் உணர்வுடன் க்ராம ஸுகாதாரக் குறைகளை நிவர்த்திக்க வேண்டும்.

ஸுகாதாரங்களுக்கான முக்ய உபகரணங்கள்:—(1) காற்று (2) ஜலம் (3) இருப்பிடம்.

காற்று (1):—நாம் உட்கொள்ளும் காற்று சுத்தமானதா யிருக்கவேண்டிய தவச்யம். க்ராமங்களுக்கு இயற்கையாகவே நல்ல காற்று கிடைக்க வழியிருந்தும், அறிவீனத்தால் பரிசுத்தமான காற்றை அநுபவிப்பதில்லை. அநேக வீடுகளுக்கு ஜன்னலே யில்லை. சில வீடுகளுக்கு ஜன்னல் இருந்தும் நல்ல காற்று உள்ளே செல்ல மார்க்க மில்லாமல் அமைக்கப் பட்டிருக்கிறது. ஜன்னல்களை ஒரு பக்கத்தில் மாத்ரம் வைத்துக் கட்டு-

கிறார்கள். அந்த ஜன்னல்களால் அதிக ப்ரயோஜனமில்லை. ஜன்னல்களை நேருக்கு நேராக வைத்துக் கட்ட வேண்டும். வீட்டுத் தாழ்வாரங்களிலும், தெருக்களிலும், ஆடு மாடுகளைக் கட்டுகிறதினாலும், தெருக்களிலும் சந்துகளிலும்மலஜலங்களைக் கழிக்கிறதினாலும், அசுத்தமான காற்றையும் கொசுக்கடியையும் அநுபவிக்க வேண்டியிருக்கிறது. கும்பகோணத்தைப் போன்ற கொசுக்கடியும், மதுரை, நாகப்பட்டணம் இவ்விடங்களிலுள்ள சாக்கடை நாற்றமும் க்ராமங்களில் இதுவரையில் கிடையா. இனிக் கும்பகோணத்திலுள்ள மாதிரி கொசுக்கடி க்ராமங்களிலும் உண்டாகலாமென்று தோன்றுகிறது. ஜனங்களுக்குள் ஒற்றுமைக் குறைவும், ஸுகாதாரத்துக்கான விஷயங்களில் கவனமின்மையுமே இதற்குக் காரணங்களாம்.

சுத்தமான காற்றை க்ராம ஜனங்கள் அடைய அடியில் கண்ட சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். (1) ஒவ்வொரு வீட்டுக்கும் இரண்டு மூன்று ஜன்னல்களுக்குக் குறையாமல் வைத்துக் கட்டவேண்டும். (2) வருஷத்துக்கு ஒருதடவை வீடுகளுக்குச் சுண்ணாம்பு பூசவேண்டும். (3) ஆடுமாடுகளை ஸமீபத்தில் கட்டும் வழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டும். (4) புஷ்பச் செடிகளையும் மரங்களையும் வீட்டைச் சுற்றி வைக்க வேண்டும். சட்டிகளில் ஆமணக்குச் செடிகளைப் பயிர் செய்து வீட்டுத் தாழ்வாரங்களிலும் ஜன்னல் வெளிப் பக்கத்திலும் வைக்கக் கொசு இறந்து விடுமென்று தெரிகிறது.

(2) ஜலம்:—நல்ல ஜலம் க்ராமங்களில் கிடைப்பதரிதாயிருக்கிறது. நல்ல ஜலம் நமது உபயோகத்துக்கு வேண்டியவளவு கிட்டாமற் போவதாலும், கிடைக்கும் ஜலம் அசுத்தமாக இருப்பதாலும், நமது ஸௌக்யத்துக்கு நேரிடுந் தீமைக்கு அளவேயில்லை. க்ராமங்களிலுள்ள குளங்கள், ஆறுகள், கிணறுகள், பல விதங்களில் கெடுதி யடைகின்றன. குளங்களில் மாடு கன்று குளிப்பாட்டுவதிலும், மழை ஜலத்துடன் மலமூத்ராதிகள் குளத்தில் சேருவதாலும், மட்டைகள் கீற்றுகள், ஊறவைத்தல், மரங்களின் தழைகள் விழுதல், வேஷ்டி துவைத்தல், குளித்தல், சௌசம் செய்தல் ஆகிய இவைகளாலும் குளங்கள் அசுத்த மடைகின்றன. மேலும், கழனிகளிலிருந்து வடியும் ஜலமும் குளங்களில் கலக்கின்றன. ஒரே துறையில் கால்நடைகளும், மனிதர்களும் வித்யாஸமில்லாமல் குளிப்பதை க்ராமங்களில் காணலாம்.

ஆறுகள்:— படுகைகளின் கழிவாலும் பல வாய்க்கால்கள் பலவித நீரைக் கொண்டுவந்து கலப்பதாலும், நமது தேசத்தில் பெரும்பாலும் மயானங்கள் ஆற்றின் கரைகளிலிருப்பதாலும், சாயக்காரர்கள் ஆற்றில் துணி துவைப்பதாலும், ஆடு மாடுகள் குளிப்பாட்டுவதாலும் ஆற்றுநீர் அசுத்த மடைகிறது. மேலும் நகரங்களுக்கருகாமையிலிருக்கும் ஆற்றில், சாங்கடை நீர், தோல் பதனிடும் சாலைகள், பஞ்சாலை, அரிசியாலை, இவைகளின் யந்திரக்கழிவு நீர், ஆகிய இவைகள் சில ஸமயம் ஓடிக்கலக்கின்றன.

கிணறு.— கிணற்றின் ஓரங்களில் பெய்த மழை ஜலம் கிணற்றில் ஊறும்படி விடுகிறதினாலும், எருக்குப்பைகளை ஸமீபத்தில் கொட்டிவைப்பதாலும், சாக்கடைகள், மாட்டுத் தொழுவங்களின் கழிவுநீர்கள், இவைகளைக் கிணற்றோரங்களில்ஓடும்படி விடுவதாலும், கிணறுகள் அசுத்தமடைகின்றன. இவ்விதம் ஜலாதாரங்களை நாம் அசுத்தப்படுத்தி விடுகிறோம். க்ராமவாஸிகளும் நகரவாஸிகளும் தாம் அருந்தும் ஜலத்தைப் பரிசுத்தமானதாய் தெரிந்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

(1) பரிசுத்தமான ஸ்தலத்திலிருந்து ஜலம் நமக்குக் கிடைக்கிறதா? (2) யாதொருவித கசடுகளுமில்லாமல் வெகு ஸ்வச்சமாயிருக்கிறதா? ஒருவித மணமும் ருசியுமில்லாம லிருக்கிறதா? (4) அது ஜில்லென்றிருக்கிறதா? (5) அதில் பருப்பு எளிதில் வேகிறதா?, என்று இவ்வளவு தூரம் பரிசோதிக்க வேண்டும். எந்த ஜலத்தில் பருப்பு எளிதில் வேகவில்லையோ, எந்த ஜலம் களியுமணலுங் கலந்த தரையில் ஊறுகிறதோ, அந்த ஜலத்தை அசுத்தமான ஜலமென்று நீக்க வேண்டும். இன்னும் ஸுகாதாரங்களை வ்ருத்தி செய்ய அடியில் கண்ட வழிகளை அநுஸரிக்க வேண்டும்.

(1) ஒவ்வொருவரும் அருந்தும் ஜலம்மேலே சொன்ன மாதிரி பரிசுத்தமான கிணற்று ஜலமாயிருக்கவேண்டும். (2) கிணற்றின் உட்புறத்தில் கசிவு நீர் இறங்காதபடி ஸிமெண்டு பூசியிருக்கவேண்டும். (3) கிணற்றைச் சுற்றிச் சுவரெடுத்து மேடை போட்டு மேடையில் விழும் ஜலம் பூமியில் நிற்காமல் வழிந்து ஓடும்படி ஏற்பாடு செய்திருக்க வேண்டும் (4) கூடுமான

வரையில் எருக் குப்பைகளையும் மாட்டுத் தொழுவங்களையும் 100 - கஜதூரத்துக் குள்ளிருக்காமல் செய்ய வேண்டும். (5) ஆடுமாடுக்களுக்கென்று தனியான குளங்கள் இருக்கவேண்டும். மனிதர்கள் குளிப்பதற்கென்றும், அருந்துவதற் கென்றும், தனித்தனி குளங்கள் வெட்ட வேண்டும். (6) ஒவ்வொரு குளக்கரையும் உயர்த்தப் பட்டு மழை ஜலம் குளத்தில் ப்ரவேசிக்காமல் செய்திருக்க வேண்டும். (7) குளங்களுக்குத் தவறாமல் வடிகால்கள் அமைத்திருக்க வேண்டும். (8) கூடுமானபோது பழைய ஜலத்தை வடித்துப் புதிய ஜலம் தேக்கிக்கொள்ள வேண்டும். (9) தழைகள் விழாதபடி மரங்களைக் குளக்கரைகளினின்றும் விலக்க வேண்டும்.

(3) வஸிக்கு மிடம்:— காய்ந்த தரையில் வஸிப்பது எப்பொழுதும் நமது தேகத்துக்கு ஸௌக்யத்தை விளைக்கும். (பிழைக்கும் வழி.)

குரங்குகள் வளர்த்த பையன்

ஆபிரிக்காவில் சுதேசி வர்க்கத்தைச் சேர்ந்த ஆண் குழந்தை யொன்றைப் பல வருஷங்களுக்கு முன், வயல் புறத்தில்கிடத்திவிட்டுத் தாயார் வேலை செய்துகொண் டிருக்கையில் சில மனிதக் குரங்குகள் அக் குழந்தையை எடுத்துச் சென்றன. அக்குரங்குகள் அப்பையனை வளர்த்து வந்தன. பல வருஷங்களுக்குப் பிறகு இப்போது அப்பையனுடைய 14-வது வயதில் அவன் மனிதக் குரங்குகளி னிடையில் இருப்பதைக் கண்ட சிலர் மிகப் பிரயாசையின்மீது அவனை அக்கூட்டத்தினின்றும் விடுவித்தார்கள். என்றாலும் அப்பையனுக்கு மனிதக் குரங்குகளின் பழக்க வழக்கங்களே அதிகமாய் இருப்பதாயும், அவன் பச்சைக் கிழங்குகளையே தின்பதாயும், வண்டியை ஓட்டும் போது அவன் திடீரென்று நுகத்தடியின் மீது தாவிக் குரங்கைப்போல் உட்கார்ந்து கொள்வதாகவும் அத்தேசப் பத்திரிகை யொன்று கூறுகிறது.

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

சந்தா	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ.	1	8	0
ற் கூலி	பினங்கு, சிங்கப்பூர் முதலிய				
ர்யட	வெளிநாடுகளுக்கு ...	ரூ.	2	0	0
ச்சஞ்சிகை	... ... விலை	ரூ.	0	2	0

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானல் அணு மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	...ரூபா 10—0—0
அரைப் பக்கத்திற்கு ,,	... ரூபா 5—0—0

காண்டிராக்ட் ரேட்டானல் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

அமிர்தாஞ்சன

சர்வ நோய்களுக்

வலித்த ஔஷதம்

விலை அணு 10 அணு 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

எல்லா நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.

Vavilla Press, Madras.